Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 கார்த்திகை 22 ஹிஜ்ரி 1428 துல்கதா 04 (07.12.2005) புதன்கிழமை இதழ் 68

Dialog டயலொக்.

kit

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

எந்நேரமும் எம்முடன்....

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

# இருபாலை கிளைமோர் தாக்குதலில் அதிகாரி உட்பட ஏழு படையினர் பலி!



சம்பவ இடத்தில் படையினரின் சடலங்களைப் பார்வையிடுகிறார் நீதிபதி

யாழ்ப்பாணம் —

இருபாலையில் நேற்றுக்காலை இராணுவத்தினர் பயணம் செய்த உழவு இயந்திரத்தின் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் அதிகாரி ஒருவர் உட்பட ஏழு படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர், ஒருவர் படுகாயமடைந்தார்.

யாழ் - பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்தியிலிருந்து சுமார் 200 மீற்றர் தெற்காகவுள்ள கற்பகப் பிள்ளையார் கோவிலடிப் பகுதியிலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 10.10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அச்சுவேலி 511 ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த 10 ஆவது தேசிய காவற்படை பற்றாலியனில் பணியாற்றும் எட்டுப் படையினர் நேற்றுக் காலை உழவு இயந்திரம் ஒன்றில் படைமுகாம்களுக்கு உணவு விநியோகம் செய்துகொண்டிருந்தனர்.

இவர்கள் இருபாலை இராணுவ முகாமில் உணவுப் பொருட்களைக் கொடுத்துவிட்டு கல்வியங்காடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே - மரம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் படையினர் சென்ற உழவு இயந்திரம் சுக்கு நூறாகியதுடன், தீப்பிடித்து எரிந்தது. அதில் பயணம் செய்த,அதிகாரி ஒருவர் உள்ளிட்ட எழு படையினர் பலியானதுடன், மேலும் ஒருவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மீது நெல்லியடியில் கிரனேட் வீச்சு!

நெல்லியடி —

நெல்லியடி நகரில் நேற்று மாலை இராணுவத்தினர் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. நேற்றுமாலை 6.15 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் படையினருக்குச் சேதங்கள் ஏற்பட்டதா என்பது தெரியவில்லை.

கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால், நெல்லியடிப் பிரதேசத்தில் நேற்றுமாலை பெரும் பதற்றம் நிலவியது. (13)


## கருணா குழுவினர் நால்வர் அம்பாறையில் சுட்டுக்கொலை!

அம்பாறை —

அம்பாறை மாவட்டத்தில் பன்னலகம என்ற இடத்தில் இனியபாரதி உள்ளிட்ட கருணா குழுவைச் சேர்ந்த நான்குபேர் நேற்று அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கஞ்சிகுடிச்சாறு விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவலரண்களை நோக்கி சுமார் பத்துப் பேர் கொண்ட கருணா குழுவைச் சேர்ந்தவர்களும், இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் சென்றுகொண்டிருந்தபோது - நேற்று அதிகாலை 2.20 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கருணா குழுவுடன் சேர்ந்து இயங்கிவந்த ஞானதீபன் மற்றும் புகழ்வேந்தன் ஆகிய இருவருமே - (12 ஆம் பக்கம் பார்க்க)



சுமன்



இனியபாரதி

## படையினரால் பல பொதுமக்கள் நையப்புடைப்பு!

யாழ்ப்பாணம் —

இருபாலையில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலையடுத்து படையினரால் பெருமளவு பொதுமக்கள் தாக்கப்பட்டதுடன், ஐந்து பேர் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

படையினரின் உழவு இயந்திரம் தாக்கப்பட்டதையடுத்து கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி பெருமளவு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைகளின் தளபதிகளும்

## படையினரின் அத்துமீறலை கண்டித்து

# முப்படைகளின் தளபதிகளும் யாழ்ப்பாணத்துக்கு விரைவு!

கொழும்பு —

இருபாலையில் நேற்றுக்காலை கிளைமோர் தாக்குதலில் 7 படையினர் பலியானதையடுத்து - குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக ஆராய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையிலான உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று யாழ் வந்துள்ளது.

நேற்றுமாலை விமானப்படையின் விசேட விமானம் மூலமாக வந்த இந்தக் குழுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கோத்தபாய ராஜபக்ஷ, கூட்டுப் படைகளின் தளபதி அட்மிரல் தயாசந்தகிரி, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா, கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா, பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ (12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் அத்துமீறலை கண்டித்து வடமராட்சியில் ஆர்ப்பாட்டப் பேரணி!


பருத்தித்துறை —

படையினரின் அத்துமீறல்களைக் கண்டித்து வடமராட்சியில் நேற்று மாணவர்களும், பொது மக்களும் இணைந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தை ஊடறுத்து படையினர் பாரிய மண் அணையை அமைத்து வருவதைக் கண்டித்தும் - மாணவர் மீதான காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்றுமுன்தினம் முதல் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மாணவர்கள் மற்றும் பொது மக்கள்மீது படையினர் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதனைக் கண்டித்து நேற்றுக்காலை 9 மணியளவில் ஹாட்லிக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் எந்த சவால்களையும் எதிர்கொள்ள படையினர் தயார்!



## புதிய இராணுவத் தளபதி சூளுரை

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்வதற்கு இராணுவம் தயாராகவே இருப்பதாகவும் -

ஆனாலும், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் தாக்குதல்கள் மீண்டும் ஒரு முழு அளவிலான யுத்தத்துக்கு நாட்டை இட்டுச்செல்லாது என நம்புவதாகவும் புதிய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் நேற்றுக்காலை செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தத் தாக்குதலுக்கு நாம் விடுதலைப் புலிகளைச் சந்தேகிக்கின்றபோதும்- ஆதாரபூர்வமாக சாட்சியங்கள் எம்மிடம் இல்லை. சூட்டுச் சம்பவம் இடம்பெறும்போது அந்த இடத்தில் சுடும் நபரைக் கைதுசெய்தால் மட்டுமே நாம் சாட்சியங்களைக் காண்பிக்க முடியும். (12 ஆம் பக்கம் பார்க்க)



18 ஆவது இராணுவத் தளபதியாக நேற்று பதவியேற்றுக்கொண்ட லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு இராணுவத் தலைமையகத்தில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டபோது...




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

EXPOAiR

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

*Your friend in the skies...*

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# யாழ்.குடாநாட்டு மாணவர்களை பகிஷ்கரிப்பில் ஈடுபட அழைப்பு

யாழ்ப்பாணம் —

வடமராட்சியில் மாணவர்கள் நடத்திய போராட்டத்துக்கு அரச தரப்போ இராணுவத் தரப்போ பதிலேதும் தராததால் - குடாநாட்டிலுள்ள அனைத்து மாணவர்களையும் கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணித்து போராட்டத்தில் இணையுமாறு தமிழ் மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

இது தொடர்பாக தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

'பாடசாலைகளுக்கு அருகில் உள்ள இராணுவ முகாம்கள், காவலரண்கள் அகற்றப்படுவதோடு அச்சுறுத்தல் எவையுமற்ற சுதந்திரமான கற்றல் செயற்பாடுகளுக்கு இராணுவம் வழி விடல் வேண்டும்' என்ற கோரிக்கையோடு தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அழைப்பின்பேரில் கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணிக்கும் போராட்டம் வடமராட்சியில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. வடமராட்சிப் பிரதேசமெங்கும் கல்விச் செயற்பாடுகள் அனைத்தையும் புறக்கணித்த மாணவர்கள் தங்களது கோரிக்கைக்கான நியாயமான பதிலை நேற்று மாலைக்கிடையில் படைத்தரப்பினர் தரவேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஹாட்லிக் கல்லூரி வளாகத்துள் அமைந்திருக்கும் இராணுவமுகாம் அதிகாரிகளுடனும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு யாழ்.மாவட்டத் தலைவருடனும் தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் பேச்சுவார்த்தை நடத்தியபோதும் பலனெதுவும் எட்டப்படவில்லை.

இந்தநிலையில் பருத்தித்துறை, நெல்லியடி பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட மாணவர்கள் மீது படையினர் இருபதுக்கும் மேற்பட்ட வேட்டுக்களைத் தீர்த்ததுடன், பருத்தித்துறைப் பகுதியில் மாணவர்கள் மீது தடியடிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

உரிமைக்காகப் போராடும் மாணவர்கள் மீது அவர்களை அடக்கும் வகையில் படையினர் தமது ஆயுத பலத்தைப் பிரயோகிப்பதை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு பாரிய பின்விளைவுகள் ஏற்படுமெனவும் எச்சரிக்கிறோம்.

மாணவர் ஒன்றியத்தால் அழைப்பு விடுக்கப்பட்டு வடமராட்சியில் இடம்பெற்ற போராட்டத்துக்கு அரச தரப்பும், இராணுவத் தரப்பும் இதுவரையில் பதிலெதுவும் தராத நிலையில் - அனைத்து குடாநாட்டு மாணவர்களும் அடுத்துவரும் தினங்களில் தொடர்ச்சியாக கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணிக்கவுள்ளோம்.

தொடர்ந்தும் பதில் தராமல் இழுத்தடிக்கப்படுமானால் க.பொ.த (சா/த) பரீட்சையைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் 9 ஆம் திகதி மாலையுடன் எமது போராட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தி பரீட்சை முடிவடைந்தவுடன் குடாநாடெங்கும் தொடர்ச்சியாக எதிர்ப்புப் போராட்டங்களை மாணவர்களாகிய நாங்கள் முன்னெடுப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருதமுனைப் படுகொலைக்கு விடுதலைப்புலிகள் கண்டனம்!

அம்பாறை —

அம்பாறை - மருதமுனைப் பகுதியில் வைத்து இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறை கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் விடுதலைப்புலிகள் மீது சேறு பூசுவதற்காக தமிழ் பேசும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை அரசு படைகளுடன் இயங்கும் ஆயுதக் குழுக்கள் தீவிரப்படுத்தியுள்ளன. தொடர்ந்தும் தமிழ் முஸ்லிம் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதன் காரணமாக நேற்று முன்தினம் மருதமுனையில் உயிரிழந்த இளைஞர்களின் உறவினர்களுக்கு நாம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் இந்தப் படுகொலைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தக்கால கட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் மிகவும் அவதானமாகவும், விழிப்புடனும் இருக்க வேண்டும். இப்படியான தாக்குதல் அக்கரைப்பற்றில் நடந்த போது அதனை நாம் கண்டு பிடித்துள்ளோம். இன்னும் கண்டுபிடிக்க வேண்டிய தேவையும் இருக்கிறது.

இதற்கு மக்கள் எமக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். இதே வேளை, இந்தச் சம்பவங்களின் பின் கலவரங்களை தூண்டி விடும் நடவடிக்கைகளை ஆயுதக் குழுக்கள் மேற்கொள்ள இருப்பதால், தமிழ் முஸ்லிம் மக்களை மிகவும் அவதானமாக இருக்கும்படி இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம் ஆசிரியர்களுக்கு தமிழீழ காவல்துறை பாதுகாப்பு

திருகோணமலை —

திருகோணமலை - மூதூர் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையைத் தொடர்ந்து, கணேசபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்குபற்றிய 36 முஸ்லிம் ஆசிரியர்களும் தமிழீழ காவல்துறையினரின் பாதுகாப்புடன் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

தோப்பூர் மற்றும் மூதூர் பகுதிகளிலிருந்து 36 ஆசிரியர்கள் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றியிருந்தனர்.


மூதூர் பகுதியில் ஏற்பட்டிருக்கும் பதற்றநிலையை அடுத்து இந்த முஸ்லிம் ஆசிரியர்கள் தமிழீழ காவல் துறையின் பாதுகாப்புடன் கட்டைப் பறிச்சான் இராணுவ காவலரண் வரை கொண்டுசென்று விடப்பட்டனர்.

# இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் மருதமுனையில் சுட்டுக்கொலை

கொழும்பு —

அம்பாறை - மருதமுனையில் நேற்று முன்தினம் இரவு இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

அபூ உபைதா மிர்சான் (வயது 24) மற்றும் மொகமது ரிஸ்வான் (வயது 32) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.



இவர்களின் சடலங்கள் நேற்றுக் காலை கடற்கரையில் இருந்து கண்டெடுக்கப்பட்டதையடுத்து உருவான பதற்றநிலை காரணமாக ஆத்திரமடைந்த குழுவினர் பிரதான வீதியில் இறங்கி தடிகள், பொல்லுகள், கற்கள் சகிதம் வன்முறையில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு - கல்முனை வீதியின் குறுக்கே ரயர்களைப் போட்டு எரித்தும், கற்களைக் குவித்தும் சில குழுவினரால் போக்குவரத்துத் தடைகளும் ஏற்படுத்தப்பட்டன.

இந்த வழியாக கோட்டைக் கல்லாறு பாலம் புனரமைப்புப் பணிகளை மேற்பார்வை செய்யச் சென்ற ஜப்பானிய ஜெய்கா நிறுவனத்தைச் சேர்ந்த ஜப்பானியர்கள் உட்பட சிலர் தாக்கப் பட்டனர்.

இவர்கள் பயணம் செய்த இரண்டு வாகனங்களும் அடித்து நொருக்கப் பட்டன.

தமிழர்களுக்குச் சொந்தமான நான்கு அலுவலகங்கள் சேதமாக்கப் பட்டு, உடைமைகள் வீதியில் குவிக் கப்பட்டு எரிக்கப்பட்டன.

மருதமுனையில் உருவாகியுள்ள இந்த நிலை காரணமாக கல்முனை பிரதேசத்திலும் பதற்றநிலை காணப் படுகிறது. தமிழ் - முஸ்லிம் எல்லைப் புறங்களிலிருந்து சுனாமியால் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருப்பவர்கள் உட்பட இரு தரப்பிலும் பல குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளன.

மருதமுனை முதல் சாய்ந்தமருது வரையிலான கல்முனை பிரதேசத்தில் நேற்று பாடசாலைகள் இயங்கவில்லை. அரசாங்க, தனியார் நிறுவனங்கள், சந்தைகள், கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

பாதுகாப்பு தற்போது பலப்படுத்தப் பட்டு மேலதிக பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் அங்கு குவிக் கப்பட்டுள்ளனர்.

வன்முறைச் சம்பவங்களின் போது வன்முறையாளர்களைக் கலைப்பதற்காக இடையிடையே பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததுடன், கண்ணீர் புகைக்குண்டுகளும் வீசப்பட்டன.


மனோகரா யாழ்ப்பாணம்



7ஆவது வெற்றி வாரமாக...
இளைய தளபதி விஜய், அசின், பிரகாஷ்ராஜ் நடிக்கும் சிவகாசி
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

9 ஆம் திகதி முதல் காலை 10.30 காட்சியாக சிவகாசி
1.30, 4.30, 7.30, 10.30 காட்சியாக சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த ஆறு
இந்தியா இலங்கை ஒரே தின வெளியீடாக

9 ஆம் திகதி முதல் புதிய நேரடி புதிய காட்சிநேரம் காலை 10.30, மதியம் 1.30, மாலை 4.30, இரவு 7.30, 10.30

சுன்னாகம் நாகம்ஸ்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
அக்ஷன்கிங்அர்ஜுன், நமீதாமற்றும்பலர் நடித்த ஆணை
காட்சிகள்:-11.00, 3.00, 7.00, 9.30, 1.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
ரஜனிகாந், பிரபு, ஜோதிகா, வடிவேல் மற்றும் பலர் நடித்த சந்திரமுகி
காட்சிகள்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையில் ஒரே தின வெளியீடு
சியாம், சினேகா, அபர்ணா நடித்த ABCD
காட்சிகள்;-10.30, 2.30, 6.30, 9.00 (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம் அசின் நடித்த மஜா
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)


# உடுவில் கோட்ட பாடசாலைகளின் வெளிச்ச வீட்டு நிகழ்வுகள்

உடுவில் —

உடுவில் கோட்ட பாடசாலைகளுக்கிடையே ஆங்கிலக் கல்வியை விருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் வெளிச்ச வீட்டு நிகழ்ச்சிகள் எதிர்வரும் 9, 10, 11 ஆம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை நடைபெறும் இந்த நிகழ்வில் அங்கிலபாட ஆசிரியர்கள், மாணவர்களின் ஒன்றுகூடல் இடம்பெறும். முதல் நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் பி.விக்கினேஸ்வரனும், பேராசிரியர் அ.சண்முகதாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிகாமம் வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.எம்.முத்துராஜாவும், சிறப்பு விருந்தினராக கல்வியியல் கல்லூரி ஆங்கில விரிவுரையாளர் திருமதி எஸ்.செல்வமலரும் கலந்து கொள்வர்.

மூன்றாம் நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிராந்திய ஆங்கில மொழிவிருத்தி நிலையத்தை சேர்ந்த எம்.மோகனகிருஷ்ணன், சிறப்பு விருந்தினறாக பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் ஐ.இராமச்சந்திராவும் கலந்துகொள்வர். (101)

# பரிசளிப்பு விழா

சங்கானை —

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலர் சு.முரளிதரன் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்) திருமதி விமலா நாகேஸ்வரன், ஓய்வு பெற்ற அதிபர் அ.விஸ்வநாதன் மற்றும் வலிகாம வலய உடற்பயிற்சி ஆசிரிய அலோசகர் மு.லோகநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அளவெட்டி அருட்கவி சீ.விநாசித்தம்பி மற்றும் தென்னிந்திய திருச்சபை முதல்வர் ஏ.ஈ.சுரேந்திரன் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர்.

அத்துடன் பாடசாலை மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார். (48)

## சின்னஞ் சிறு செய்திகள்

### மனித உரிமைகள் தின நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கிலுள்ள மனித உரிமைகள் அமைப்புகளும் ஏனைய நிறுவனங்களும் ஒன்றிணைந்து கரித்தாஸ் நிறுவனத்தின் தலைமையில் நாளை வியாழக்கிழமை மல்லாகம் ஆர்.டி.எஸ்.மைதானத்தில் நடத்தத் திட்டமிட்டிருந்த அனைத்துலக மனித உரிமைகள் தின நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், விருந்தினர்கள் உட்பட விழாவுக்கு அழைக்கப்பட்ட அனைவரும் இதனைக் கவனத்திற் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இந்த நிகழ்வு தொடர்பிலான மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்.மறைமாவட்ட மனித முன்னேற்ற நிடுநிலையம் தெரிவித்துள்ளது.

### மிதிவெடி வெடித்து குடும்பஸ்தர் காயம்

இருபாலை —

இருபாலைப் பகுதியில் மிதிவெடியில் சிக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் வலது காலில் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றது. எஸ்.பால்ராஜ் (வயது27) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது- இருபாலை கிழக்குப் பகுதியில் குழை வெட்டிக் கொண்டிருந்த சமயம் மிதிவெடி வெடித்து வலது காலில் படுகாயமடைந்த இவர் தற்போது யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### கல்வியியற் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் —

ஐ.பி.சி. நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜி.சி.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான கல்வியியற் கருத்தரங்கு எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கொழும்பில் பிரபல கல்லூரிகளின் ஆசிரியர்களும், யாழ்ப்பாணம் பிரபல கல்லூரிகளின் ஆசிரியர்களும் இணைந்து வழங்கும் பரீட்சை வினா எதிர்பார்ப்பும், பரீட்சை வினாத்தாளை அணுகும் முறைமை தொடர்பான விளக்கங்களும் அளிக்கப்படும். கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு இலவச கையேடுகளும் வழங்கப்படும்.

### நினைவுப் பேருரையும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம் —

வண்ணை நாவலர் மாகாவித்தியாலயத்தில் நிறுவுநர் நினைவுப் பேருரை நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் நாளை காலை 10 மணிக்கு வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் ந.சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். நாவலர் நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பொ.செங்கதிர்ச்செல்வன் ஆற்றவுள்ளார். நாவலர் சரித்திரம் மறுபதிப்பு நூலை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் வெளியீட சைவபரிபாலன சபை தலைவர் கலாநிதி வ.கந்தசாமி முதற்பிரதியை பெற்றுக் கொள்வார்.

### பொதுக்கூட்டம்

மானிப்பாய் —

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் வருட இறுதிப் பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு பிரதேசசபையின் ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளதென சபையின் செயலாளர் எம்.ஜே.சாந்தசீலன் தெரிவித்தார்.

எனவே, ஆனைக் கோட்டை, பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய உப அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி அவர் மேலும் கேட்டுள்ளார். (100)

### அமல உற்பவ திருவிழா

யாழ்ப்பாணம் —

புனித கன்னிமரியாளின் அமல உற்பவ திருவிழா நாளை காலை 7 மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த பெருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் 5 ஆம் திகதி முதல் செபமாலை திருப்பலியுடன் நடைபெற்றுவருகிறது.

### செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம் —

வட இலங்கை சங்கீத சபையின் செயற்குழு கூட்டம் நாளை வியாழக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் வடஇலங்கை சங்கீத சபை இணைப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த செயற்குழு கூட்டத்தில் அவைக்காற்று நிகழ்வும் நடைபெறவுள்ளது.

# நாட்டில் பறக்கவிடப்பட்ட வெள்ளைக்கொடிகளை மீண்டும் இறக்கவேண்டிய காலம் வந்து விட்டது

## ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்.

கொழும்பு—

சமாதானப் பேச்சுக்களில் எதுவித பயனுமில்லை என்பதை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் நாள் உரையில் தெளிவாகக் கூறிய அதே வேளை, விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கமும் புலிகளின் மூத்த உறுப்பினரான பாலகுமாரனும் புலிகள் போருக்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் தமக்கு வாக்களித்தோருக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் பேசிய ரணில் விக்கிரமசிங்க, மாவீரர் தின உரை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில் -


ஐக்கிய இலங்கை, அனுசரணையாளராக நோர்வே, யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஆகியவற்றிலிருந்து இலங்கை விலகி வேறுதிசை நோக்கித் திரும்புகிறது.

நாட்டின் தற்போதைய நிலைமைக்கு ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி.பியும்தான் காரணம். தமிழீழ விடுதலைப் புலிகள் வெகுகாலத்துக்கு முன்பே உள்நாட்டு நிர்வாகஅமைப்புமுறையை ஏற்கவில்லை.

இப்போது அவர்கள் தனியரசுக் கோரிக்கையைத்தான் வலியுறுத்துகிறார்கள். இதுவிடயங்களில் ஜே.வி.பி.யும், ஜாதிக ஹெல உறுமயவும் வாய்மூடி மௌனம் சாதிப்பதுதான் சரியானதாக இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் 7 படையினர் கொல்லப்பட்டுள்ளது கண்டனத்துக்குரியது. நாட்டில்இயல்பு நிலைமையை மீளக்கொண்டு வர வேண்டியது அரசாங்கத்தின் கடமை. கடந்த சில நாட்களில் மொத்தம் 9 படையினர்கொல்லப் பட்டுள்ளனர்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இவ்வளவு எண்ணிக்கையிலான படையினர் கொல்லப்பட்டுள்ளது இதுவே முதல்முறை. நாட்டின்



கிராமங்களில் பறக்கவிடப்பட்டிருந்த வெள்ளைக் கொடிகளை மீண்டும் இறக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றார் ரணில் விக்கிரமசிங்க.

இதேவேளை, காத்தான்குடி மேலதிக அரச அதிபர் படுகொலைக்கும் யாழ்.இராணுவத்தினர் மீதான தாக்குதல்களுக்கும் கண்டனம் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையில்-

இந்தத் தாக்குதல்களுக்குக் காரணமானோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் பாதுகாப்பை அதிகரிக்கவேண்டும்.

தாக்குதல்களில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறோம். நாகரிக சமுதாயத்தில் பிரச்சினைகளுக்கு வன்முறைகள் தீர்வாகாது என்பது எமது நம்பிக்கை.

வன்முறைகளைக் தடுத்து நிறுத்தி மனித உயிர்களுக்கு மதிப்பளிக்குமாறு நாம் அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கிறோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# பாதுகாப்பை பலப்படுத்த தேசிய செயற்திட்டமாம்!

## ஹெல உறுமய கோரிக்கை



கொழும்பு—

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை கருத்திற்கொண்டு நாட்டின் பாதுகாப்புக்காக தேசிய செயற்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் —

யாழ்.குடாநாட்டிலும், கிழக்குப் பிரதேசத்திலும் தற்போது நிலவுகின்ற பதற்ற நிலையை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் அனைத்து மக்களின் பாதுகாப்பினையும் கருத்திற்கொண்டு தேசிய செயற்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரியுள்ளோம். குறிப்பாக கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் தேசிய பாதுகாப்பில் தற்போது பாரிய சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# தாக்குதல் நடத்திய குழுவினரை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்

## இப்படிச் சொல்கிறார் பொலிஸ் மா அதிபர்



கொழும்பு—

யாழ்ப்பாணத்தில் படையினர் கொல்லப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புபட்ட குழுவினரை தாம் அடையாளம் கண்டிருப்பதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்

யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு நாட்களில் படையினர் கொல்லப்பட்ட சம்பவங்கள் போர்நிறுத்த மீறல் சம்பவங்களாகும்.

குடாநாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தாக்குதல்களை நடத்தியவர்கள் யாரென்பது தெரிந்தபோதும் யாழ்ப்பாண பிரதி பொலிஸ்மா அதிபரின் தலைமையின் கீழ் விசாரணை நடைபெறுகிறது.

பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமானவர்கள் நடமாடினால் அது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். இதேவேளை வெளி மாவட்டங்களில் இருந்து கொழும்புக்கு வருவோரின் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஞானக்கோனை விடுவிக்க சட்டமா அதிபர் அனுமதி!

கொழும்பு—

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சாள்ஸ் ஞானக்கோனை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

ஞானக்கோனை விடுதலை செய்யுமாறு தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிஸ்டர் இது குறித்து நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

சட்டமா அதிபர் முன்வைத்த விடயம் தொடர்பாக தாம் திருப்தி அடைவதால் தாம் தாக்கல் செய்த மனுவை திரும்பிப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்குமாறு ஞானக்கோனின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மன்றிடம் கோரினார். இதனை ஆராய்ந்த நீதிமன்றம் மனுவை விலக்கிக்கொள்ள அனுமதி வழங்கியது.

அதேவேளை சாள்ஸ் ஞானக்கோனுக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டதால் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் மருத்துவமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமைமுதல் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூதூரில் தொடரும் சம்பவங்களுக்கும் புலிகளுக்கும் எதுவித தொடர்புமில்லை

## எழிலன் தெரிவிப்பு

திருகோணமலை—


திருகோணமலை மூதூர் பிரதேசங்களில் அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் சம்பவங்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் விளக்கம் அளித்துள்ளார்.

இது தொடர்பில் எழிலன் கருத்துத் தெரிவிக்கையில் -

எங்களுக்கும் இந்தச் சம்பவங்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை.

அமைதி முயற்சிகளைப் பாதிக்காத வகையில் அமைதியைக் கொண்டுவருவதில் நாம் பற்றுறுதியோடு இருக்கிறோம்.

அமைதி முயற்சிகளில் எமது தலைமைப்பீடம் உறுதியாக



உள்ளது. சில சக்திகள் இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட்டு எம் மீது குற்றம்சாட்டுகின்றன.

இதேவேளை எழிலனின் மறுப்பு குறித்துக் கருத்துத் தெரிவித்த கிழக்குப் பிரதேச பொலிஸ் அதிகாரி றோகான் அபயவர்த்தன, எந்த ஒரு வடக்கு - கிழக்குச் சம்பவங்களையும் தாங்கள் மேற்கொண்டதாக விடுதலைப் புலிகள் ஒப்புக்கொண்டதில்லை.

இருப்பினும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முஸ்லிம் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசிய பின்பு இந்தப் பிரதேசங்களில் பதற்றம் குறைந்து அமைதி திரும்பி வருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கட்டைப்பறிச்சான் சோதனைச் சாவடியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னிலையில் எழிலனுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையேயான சந்திப்பு நடைபெற்றது.

அதன் பின்னர் அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் நஜீப் ஏ மஜீத் மூதூர் பிரதேசங்களைப் பார்வையிட்டார். பொலிஸ் இராணுவம் கண்காணிப்புக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் அமைச்சர் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புக்களின்போது மூன்று புதிய பாதுகாப்புச் சோதனைச் சாவடிகளை அமைக்கமுடிவு செய்யப்பட்டுள்ளது.

# தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்யுமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் இந்தியா வேண்டுகோள்

கொழும்பு—

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இந்தியக் கூட்டரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் ஹர்கத் உல் ஜிகாதி இஸ்லாமிய, ஜமைத் உல் முஜாகிதீன், சீக்கியர் தனிநாடு கோரும் விடுதலை இயக்கமான காலிஸ்தான் விடுதலைப்படை ஆகிய அமைப்புக்களை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்ய வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியக் கூட்டரசின் அசாம் உள்ளிட்ட பங்களாதேஷ் நாட்டினது எல்லையோரப் பகுதிகளில் ஹர்கல் உல் ஜிகாதி இஸ்லாமிய அமைப்பு செயற்பட்டுவருகிறது.

இந்தியக் கூட்டரசின் மாநிலமாக உள்ள சீக்கியர்களின் தாயகத்தை தனிநாடாக்கக்கோரி 1980 களில் தீவிர ஆயுதப் போராட்டத்தை காலிஸ்தான் விடுதலை அமைப்பு முன்னெடுத்தது.

இலங்கைத் தீவில் தமிழர் தாயகத்தில் வாழும் தமிழர்களது அரசியல் விடுதலைக்கான அமைப்பாகிய தமிழீழ விடுதலைப் புலிகளையும் தடைசெய்ய வேண்டும் என்று இந்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

# அனுசரணையாளராக நோர்வேயை தொடர்ந்து அனுமதிக்க முடிவு!

கொழும்பு—

சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் நோர்வேயை அனுசரணையாளர் பணியை வகிக்கச் செய்வதென இலங்கை அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன.

சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் நோர்வேயை அனுசரணைப் பணியில் வைத்திருக்குமாறு இலங்கை அரசாங்கத்தை இந்தியா கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே இந்த முடிவு அரசாங்கத்தால் எடுக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கைக்கான விசேட தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் கடந்த வாரம் புதுடெல்கிக்குச் சென்று சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய நிலைமை குறித்து இந்தியத் தலைவர்களுக்கு எடுத்து விளக்கியதையடுத்து, இந்திய அரசாங்கம், இலங்கையிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இதேவேளை, இந்தியப் பயணத்தை முடித்து நாடு திரும்பும் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிடுவாரெனவும் தகவல்கள் தெரிவித்தன.

# தமிழ் இளைஞனை விடுதலை செய்யுமாறு கோரிய பரிந்துரை மீதான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு—

இராணுவ முகாம் மீதான தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் இளைஞரை விடுதலை செய்யக் கோரி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பரிந்துரைத்தது தொடர்பான வழக்கின் விசாரணை எதிர்வரும் ஜனவரி 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இராணுவ முகாமைத் தாக்கியது தொடர்பான வழக்கில் விடுதலைப் புலி உறுப்பினர் என்று கூறப்படும் நல்லரத்னம் சிங்கராசா கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் அவருக்கு உயர் நீதிமன்றம் 20 ஆண்டு சிறைத்தண்டனை விதித்தது. இந்தத் தண்டனையை மேல் நீதிமன்றம் உறுதிசெய்துள்ளது.

தம்மைக் கைதுசெய்தது, சிறையில் அடைத்தது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை விதிகளுக்கு எதிரானது என்று ஜெனீவாவில் உள்ள ஐ.நா.வின் மனித உரிமை ஆணையத்திடம் நல்லரத்னம் சிங்கராசா முறைப்பாடு செய்திருந்தார். இந்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணையமும், நல்லரத்னம் சிங்கராசாவின் மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு ஏற்று விடுதலை செய்யுமாறு பரிந்துரைத்தது.

ஐ.நா.மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தில் நல்லரத்னம் சிங்கராசா தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு மீது கடந்த 29 ஆம் திகதி விசாரணைநடைபெற்றது. அப்போது இந்த மனுமீதான விசாரணை நேற்றுமுன்தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சரத் என்.சில்வா முன்னிலையில் நேற்றுமுன்தினம் இந்த வழக்கின் விசாரணை நடைபெற்றது.

வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி ஐக்கிய நாடுகள் சபையினது வேண்டுகோளை ஏற்று, மேன்நீதிமன்ற உத்தரவை ரத்துச் செய்வது சிறிலங்காவின் அரசியல் யாப்பை மீறுவதாகும் என்றும் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை அணியின் பந்துவீச்சில் சுருண்டு படுத்தது இந்திய அணி!



சென்னை

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இடம்பெற்ற இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிவடைந்தது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேரமுடிவில் இந்தியா 2 விக்கெட் இழப்புக்கு 90 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ராவிட் 30 ஓட்டங்களுடனும், டெண்டுல்கர் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


நேற்று கடைசி நாள் ஆட்டம் ஆரம்பித்தபோது இருவரும் தொடர்ந்து ஆடினர். ஸ்கோர் 97ஆக இருந்தபோது ராவிட், வாஸ் வீசிய பந்தில் சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழுந்தார். ராவிட் 105 பந்துகளைச் சந்தித்து 3 பவுண்டரிகளுடன் 32 ஓட்டங்களை எடுத்தார்.

3ஆவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 52 ஓட்டங்களைச் சேர்த்தது. இதையடுத்து லக்ஷ்மன், டெண்டுல்கருடன் இணைந்தார்.

டெண்டுல்கர் பந்தை அடிப்பதைவிட களத்தில் அதிக நேரம் இருப்பதைத்தான் விரும்பினார். ஒரு வழியாக இந்திய அணி 38.3ஆவது ஓவரில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

22 ஓட்டங்களை எடுத்த நிலையில் டெண்டுல்கர், முரளிதரனின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். அப்போது அணியின் ஸ்கோர் 108ஆக இருந்தது. டெண்டுல்கருக்கு இந்த ஓட்டங்களை எடுக்க 126 பந்துகள் தேவைப்பட்டன. இதில் 2 பவுண்டரிகளும் அடங்கும். மொத்தம் அவர் ஒரு மணி நேரம் 58 நிமிடங்கள் களத்தில் நின்றார்.

இதைத் தொடர்ந்து கங்கூலி 5ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக லக்ஷ்மனுடன் சேர்ந்தார். சிறிது நேரத்தில் லக்ஷ்மன் ரன் அவுட்டா



னார். அவர் தனது பங்குக்கு 43 பந்துகளில் ஒரு பவுண்டரியுடன் 5 ஓட்டங்களை எடுத்தார்.


டோனி முதன் முதலாக டெஸ்டில் களமிறங்கினார். அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட கங்கூலி தனது ஓட்டக் கணக்கை 8 பந்துகளைச் சந்தித்த பின்பு தொடங்கினார்.

இலங்கை வீரர்களின் பந்துவீச்சில் அனல் பறந்தது. ஸ்கோர் 117ஆக இருந்தபோது கங்கூலி ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டை டில்ஹார பெர்னாண்டோ கைப்பற்றினார். கங்கூலி 24 பந்துகளில் 5 ஓட்டங்களைச் சேர்த்தார்.

இதையடுத்து 7ஆவது விக்கெட்டுக்கு பதான் களமிறங்கினார். அவர் வந்த வேகத்திலேயே ஓட்டமெதையும் எடுக்காமல் முரளிதரனின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து வெளியேறியதுடன், அகர்கர் களம்புகுந்தார்.

ஸ்கோர் 128ஆக இருந்தபோது அகர்கர் ஆட்டமிழந்தார். அவர் 4 ஓட்டங்களை மட்டும் எடுத்தார். அதன் பின்பு கும்ளே, டோனியுடன் ஜோடி சேர்ந்தார். டோனி ஒருநாள் போட்டியைப்போல அதிரடியாக ஆடினார். அவர் இலங்கை வீரர்களின் பந்துவீச்சை நாலாபுறமும் அடித்து விரட்டினார்.

டோனி 15 ஓட்டங்களை எடுத்திருந்தபோது - பெர்னாண்டோ வீசிய பந்தில் மலிங்க பண்டாரவிடம் பிடிகொடுத்தார். ஆனால், நடுவர் அதை முறை தவறிய பந்தென அறிவித்தார். இதனால் அதிஷ்டவசமாக ஆட்டமி



ழப்பில் இருந்து தப்பினார்.

இந்திய அணி மதிய உணவு இடைவேளையின்போது 8 விக்கெட் இழப்புக்கு 153 ஓட்டங்களை எடுத்திருந்தது. டோனி 24 ஓட்டங்களுடனும், கும்ளே 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கும்ளே மேலும் 4 ஓட்டங்களை எடுத்து 9 ஓட்டங்களை எட்டியபோது - வாஸ் வீசிய பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து ஹர்பஜன் சிங்- டோனியுடன் ஜோடி சேர்ந்தார். டோனி 30 ஓட்டங்களை எடுத்த நிலையில் பண்டார வீசிய பந்தை ஓங்கி அடித்து, குணவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதனால் இந்திய அணி 167 ஓட்டங்களில் சுருண்டது. மொத்தம் 73.2 ஓவர்களைச் சந்தித்து இந்த ஓட்டங்களை எடுத்தது. இது இலங்கை அணிக்கு எதிராக இந்தியா எடுத்த குறைவான ஓட்டங்களாகும். டெண்டுல்கர், கங்கூலி ஆகியோரின் மோசமான ஆட்டத்தால் இந்த பரிதாப நிலை ஏற்பட்டது.

அதன் பின்பு இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக குணவர்த்தனவும், சங்ககாரவும் களமிறங்கினர். இதில் குணவர்த்



தன 4 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தபோது - பதானின் பந்தில் டோனியிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இதன்பின் ஜெயவர்த்தன சங்ககாரவுடன் ஜோடி சேர்ந்தார். இவர்களில் சங்ககார நிதான ஆட்டத்தைக் கடைப்பிடிக்க - ஜெயவர்த்தன அதிரடியாக ஆடினார். எனினும், அணி 62 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 52 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களைப் பெற்றிருந்த சங்ககார, கும்ளேயின் பந்தில் எல்.பி. டபிள்யூ ஆகி பவிலியன் திரும்பினார்.

இதனையடுத்து ஜெயவர்த்தனவுடன் சமரவீர இணைந்தார். இந்த ஜோடி மிகச் சிறப்பாக ஆடிக்கொண்டிருக்கையில் - அணி 124 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது- 80 பந்துகளில் 1



சிக்ஸர், 14 பவுண்டரிகள் அடங்கலாக 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஜெயவர்த்தன கும்ளேயின் பந்தில் கம்பீரிடம் பிடிகொடுத்து வெளியேற, அத்தபத்து வந்தார். எனினும், அவர் இந்திய பந்துவீச்சாளர்களின் பந்துகளை எதிர்கொள்வதில் பெரும் சிரமப்பட்டபோதிலும், சமரவீர அடித்தாடினார்.

இந்த நிலையில் அணி 158 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 20 பந்துகளில் 1 பவுண்டரி அடங்கலாக 7 ஓட்டங்களைப் பெற்றிருந்த அத்தபத்து கும்ளேயின் பந்தில் போல்டானார்.

இதன்பின் சமரவீரவுடன் டில்ஷான் இணைந்தார். நேற்றைய ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 4 விக்கெட் இழப்புக்கு 168 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன் மூலம் இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது.

பந்துவீச்சில் கும்ளே 3, பதான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## விளையாட்டு

# சென்னை டெஸ்ட் அணியே டெல்கியிலும் விளையாடும்!

சென்னை

சென்னை டெஸ்டில் பங்குபற்றிய இந்திய அணியே இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் விளையாடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை டெஸ்ட், மழை காரணமாக பாதிக்கப்பட்டது. இதனால், வீரர்களின் திறமையை முழுமையாகக் கணிக்கமுடியவில்லை. ஆதலால், முதல் டெஸ்டுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட அணியே, இரண்டாவது டெஸ்டிலும் விளையாடுமென சென்னையில் இந்திய அணியின் தேர்வுக் குழுத் தலைவர் கிரண் மோரே தெரிவித்தார்.

அகமதாபாத்தில் நடைபெறும் மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணி, புதுடெல்கியில் நடைபெறும் 2ஆவது டெஸ்ட் போட்டியின் 4ஆம் நாள் ஆட்டத்தில் அறிவிக்கப்படும்.

2ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 10 முதல் 14ஆம் திகதி வரையிலும், 3ஆவது டெஸ்ட் போட்டி 18 முதல் 22ஆம் திகதி வரையிலும் நடைபெறவுள்ளன.

அணி விபரம் : ராவிட் (கப்டன்), கம்பீர், ஷேவாக், சச்சின், லக்ஷ்மன், கங்கூலி, யுவராஜ் சிங், கைவ், டோனி, பதான், அகர்கர், கும்ளே, ஹர்பஜன், ஆர்.பி.சிங், முரளி கார்த்திக்.

# ஒலிம்பிக் தங்க வீராங்கனை கெலி ஹோம்ஸ் ஓய்வு!

லண்டன்



ஒலிம்பிக்கில் இரட்டைத் தங்கப்பதக்கம் பெற்ற இங்கிலாந்து வீராங்கனை கெலி ஹோம்ஸ் ஓய்வு பெற்றார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த கெலி ஹோம்ஸ், கடந்த ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 800 மீற்றர் மற்றும் 1500 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கத்தைப் பெற்றவர்.

இவர் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் அவுஸ்ரேலியாவில் மெல்பேர்ன் நகரில் நடைபெறவிருக்கும் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள இங்கிலாந்து அணியில் இடம்பெற்றிருந்தார்.

ஆனால், இவர் தற்போது இந்தப் போட்டியில் பங்கேற்கப்போவதில்லை என்றும், போட்டிகளில் இருந்து ஓய்வுபெறப் போவதாகவும் அறிவித்திருக்கிறார்.

இந்த வருடம் இவர் போட்டியொன்றில் காயமடைந்தபோதும் - அதிலிருந்து முழுமையாகக் குணமடைந்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிரேக் சப்பலின் செயற்பாடுகளுக்கு வசீம் அக்ரம் விமர்சனம் தெரிவிப்பு



சென்னை

இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பலின் செயற்பாடுகள் சரியாக இல்லை என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் -

இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையே அடுத்த மாதம் நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடர் இரு நாடுகளுக்குமிடையே சிறந்த நட்புறவை ஏற்படுத்துவதாக இருக்கும். இரு நாடுகளில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பது முக்கியமல்ல. இரு நாடுகளின் உறவு மேம்படுவதுதான் முக்கியம்.

இது போன்ற தொடர்களை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்துவது என்று இரு நாட்டு கிரிக்கெட் சங்கமும் எடுத்த முடிவு வரவேற்கக் கூடிய ஒன்று. ஒவ்வொரு வருடமும் நடத்தினால் மக்களிடம் ஆர்வம் குறைந்துவிடும்.

இந்தத் தொடரை இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளிடையே நடைபெறும் ஆஷஸ் தொடரோடு ஒப்பிட முடியாது. இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையே போட்டிகள் நடக்கும் போது அது வீரர்களுக்கு ஒருவித அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பலின் செயற்பாடுகள் சரியாக இல்லை. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒருவித கலாசாரம் உண்டு. அதை உணர்ந்து அவர் செயற்படவேண்டும். ஒரு தொடரில் ஒரு வீரரின் செயற்பாடு மோசமாக இருப்பதை வைத்து அவரது திறமையை அளந்துவிடமுடியாது.

கங்கூலியின் திறமை குன்றியிருக்கலாம். இந்த நேரத்தில் அவரை கைதூக்கிவிட முயற்சிக்க வேண்டுமே தவிர, அவரை மேலும் கீழே அழுத்த முயற்சிக்கக்கூடாது. கங்கூலிக்கு 33 வயதுதான் ஆகிறது. அவர் இன்னும் சில ஆண்டுகள் விளையாட முடியும்.

டெண்டுகல்கர் உலகிலேயே தலைசிறந்த வீரர்களில் ஒருவர். அவர் நிச்சயம் கவாஸ்கரின் 34 சத சாதனையை முறியடிப்பார். அவரும் சில ஆண்டுகாலம் விளையாடுவார். டெண்டுல்கர் இன்னும் யாரும் நெருங்கமுடியாத பல சாதனைகளை நிச்சயம் ஏற்படுத்துவார்.

இர்பான் பதான் சிறந்த வீரர்தான். ஆனாலும் அவரை கபில்தேவோடு ஒப்பிடமுடியாது. கபில்தேவ் எப்போதுமே மிகச் சிறந்த வீரராகத் திகழ்ந்தார். பதான் இன்னும் கடுமையாக உழைத்தால், கபில்தேவ் அளவுக்கு உயரமுடியும். அதேபோல சகீர்கானும்



திறமையாகச் செயற்படுகிறார். அவரைத் தொடர்ந்து அணியில் இடம்பெறச் செய்வது இந்திய அணிக்கு நல்லது.

நான் எந்த நாட்டு அணிக்கு வேண்டுமானாலும் பயிற்சியளிக்கத் தயாராக இருக்கிறேன். அதே வகையில் தான் இந்திய அணியையும் என் கருத்தில் வைத்துள்ளேன். நான் நாடு வித்தியாசம் பார்ப்பதில்லை. நான் கூட முன்பு கபில்தேவிடம் பந்துவீச்சு குறித்து ஆலோசனை பெற்றிருக்கிறேன். எனக்கு தெரிந்ததை கிரிக்கெட் உலகுக்கு சொல்லிக் கொடுக்கத் தயங்கமாட்டேன். இவ்வாறு வசீம் அக்ரம் கூறினார்.

# அன்னிய செலாவணி மோசடியில் மூன்று சிம்பாப்வே வீரர்கள் கைது!

ஹராரே

சிம்பாப்வே நாட்டு கிரிக்கெட் வீரர்கள் அன்னிய செலாவணி மோசடியில் ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டது.

இதையடுத்து அணி முகாமையாளர் பாபுமேனன் மற்றும் கிரிக்கெட் வீரர்கள் விசிசிபந்தா, வெட்டிங்கடன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

மேலும் 6 வீரர்களும் மோசடியில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது. அவர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

கிரிக்கெட் வீரர்கள் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்திருப்பதாக வந்த புகாரை அடுத்து, அவர்களது வங்கிக் கணக்கு குறித்து விசாரணை நடத்தப்பட்டது. அப்போதே அவர்கள் மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா/த) பரீட்சை -2005 மாதிரி வினாத்தாள்




## ENGLISH LANGUAGE - PAPER ONE

Answer all questions on this paper itself.

Q. 1. Complete the blanks using a, an, or the only where necessary. The first one is done for you.

a. (1) The earth goes round (2) ..................... sun and (3) ...............moon goes round (4) ..................... earth.

b. There is (5) ............................. flight to london three times (6) .............. week.

c. Our teacher gave us (7) ............................. example to prove the fact but, (8) .............................. example was very complicated.

d. (9) ...................... air we breath is polluted these days.

e. Please don't make (10) ...................... noise, (11) ................ baby is asleep.

(1/2x10=05)

Q2. Match the questions with the answers. Write the number of the answer in the box.

| Questions | | Answers |
|---|---|---|
| a. What would you like for breakfast? | ☐ | 1. No none |
| b. Do you like some coffee? | ☐ | 2. Yes, I slept like a log. |
| c. Have you got any sisters? | ☐ | 3. No, Thank you, I just had tea. |
| d. Did you sleep well? | ☐ | 4. Not yet, There are no flights. |
| e. Has Namal left for Canada? | ☐ | 5. Egg and toast please. |

(1x5=5)

Q3. Fill in the blanks of the following paragraph using prepositions from the list below. The first one is done for you.

to, to, of, of, in, in, about, about, in, of

The largest bird (1) in the world is the ostrich, which lives (2) ...................... Africa. A fully grown male ostrich is (3) .............................. 2.4 metres tall and it weighs (4) ............................. 130 kilograms. It cannotfly but can run fast. When going(5)....................full speed it can cover about 65 kilometres. (6) ........................... an hour. The food (7) ............................. an ostrich is plants and some insects. It sometimes eats heavy stones as they help in digesting (8) ..................... food. It has a pair of long legs that help them (9) .................... run fast. If you Pay a visit (10) ........................ the Dehiwala zoo, you will see a couple or two (11) ....................... this strange bird,

(1/2x10=5)

Q 4. Read the student record sheet given below, and write a paragraph about Sunil Perera.

| | | |
|---|---|---|
| Family name | :- | Perera |
| Other Names | :- | Sunil Ranjith |
| Address | :- | No. 37, Reed Avenue, Negombo. |
| Sex | :- | Male |
| Age as at Last birthday | :- | 15 years |
| Height | :- | 5 feet 6 inches |
| Colour of hair | :- | Black |
| Colour of Eyes | :- | Brown |
| School/College | :- | Central College |
| Subjects Studied | :- | Science subjects, Sinhala and Mathematics |
| Sports | :- | Volleyball an Football |
| Hobbies | :- | Philately and gardening |

Now begin your paragraph..........
He is sunil Ranjith Perera.He lives.......................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................

(5 marks)

Q 5. Read the following Post card sent to you by Niluka.

POST CARD

I have a presentation on 'The Rainforests of Sri Lanka.' I can remember you having a book on forests of Sri Lanka. Can I come on Sunday to borrow the book? will you be available? Please let me know.

Niluka

Write a reply to Niluka on a post card. Say you will not be at home as you have to attend a Seminar. Ask Niluka to come on another day or tell her where else she can find a book on forests. (Use about 30-40 words only)

Post Card

.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................

(5 marks)

Q6. Read the following text and answer the questions given below.

'Grebes' - birds that eat their own feathers.

There are about 22 Grebe species distributed in many parts of the world, mostly in temperate regions. Fresh water lakes and rivers are their main habitats.

What is unusual about these birds which develop brightly coloured head tufts and plumes during their breeding season, is their weird habit of eating own feathers and also feeding them to their young. The young birds also eat their own feathers and sometimes pluck them off their own parents' bodies. As Grebes have around 20,000 feathers, losing some of them may not be harmful when it comes to keeping warm. But no one is still sure as to why these strange birds eat feathers. Some believe that the feathers may help them in formation of pellets, so that bones and other indigestible matter can be ejected.

Grebes build floating nests on water anchored to vegetation, and lay about 2-6 eggs. The eggs are incubated for about 3-4 weeks.

a. How many species of Grebes are there? Where do they live?
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................

b. What does the "weird habit" in paragraph two refer to?
.........................................................................................
.........................................................................................

c. Why is losing some feathers not harmful to the Grebes?
.........................................................................................
.........................................................................................

d. Where do these birds build their nests? How long is the incubation period?
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................

e. Find a word from the passage which has the same meaning to each of the following word.

i) Natural living environment of an anaimal or plant
.........................................................................................

ii) Bunch of hair
.........................................................................................

(1x5=5)

Q7. Write the correct form of the verb in brackets to fill in the blank space.

The frost family (1) .......................... (live) in a cottage in the country side, It (2) .......................... (be) in the Northem part of London and has a very calm atmospher. They (3) ................. (has) two sons and a daughter. The daughter (4) ........................ ( go) to work in London, and the sons (5) ............... (study) in the Queen Mary University in London.

(1x5=5)

Q8. Your friend has invited you for his/her birthday party, but you are unable to attend as you have to study for your term end examination. Write a brief note of about 30-40 words.

- ❒ Telling him the reason why you cannot attend.
- ❒ Wishing him on his birthday.
- ❒ Say that you would see him on a later date ..........................................

.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................
.........................................................................................

(5 marks)

## ENGLISH LANGUAGE - PAPER TWO

Q9. Underline the most suitable word that fills the blank

1. For many years the Prices of commodities have been .............................. rising.
(Service, Services, servicing)

2. The ....................................... of the carpenters are costly.
(service, services, servicing)

3. Going on trips abroad is ......... thing. (costing, cost, costly)

4. A ........................... wage of a mason is almost thrice that of a teacher.
(days, day. daily)

5. English can be learnt ................. well in a short time.
(reason, reasonably, reasonable)

(1x5=5)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா/த) பரீட்சை -2005 மாதிரி வினாத்தாள்

**Q10.** Read the following text and underline the most suitable word from within the brackets to fill the blank in each sentence.

a. The "Aluth Avurudda" .............................. the reaping of the harvest and social customs of the farming community. (signifies, defines, decorates)

b. Something unique about the 'Avurudu' is the observing of .............................. (customs, habits, celebrations)

c. Very special traditional games are .............................. in the Avurudu celebrations (played, observed, introduced)

d. With the dawning of the 'Avurudu' people .................... themselves in religious activities (engage, believe, perform)

e. The 'Avurudu' period is the most .............................. time of the year for the old and the young (interesting, agitating, enjoyable).

(1x5=5)

**Q11.** Read the following advertisement and answer the questions given below.

**PURCHASE OF LANDS**

Department of fisheries and Aquatic Resources

It is required to purchase a block of land form 25 perches to 40 perches with water service and electricity and road facilities close to the sea lagoon and situated within a radius of 1/2 kilometre form the Negombo Fish Market, to construct a building for a search operation centre.
It is requested to send all details with prices and the land extent etc confirming to the above criterion by
Registered post to reach us on or before 30.12.2005 to the following address.

DIRECTOR GENERAL,
DEPARTMENT OF FISHERIES AND AQUATIC RESOURCES,
27, SEA STREET, COLOMBO.

a. who is interested in purchasing a land?
..............................................................................
..............................................................................

b. For what purpose do they intend buying this land?
..............................................................................
..............................................................................

c. What facilities do they request for?
..............................................................................
..............................................................................

d. Find the words from the text that have the same meaning as the following:-
1. buy ..............................
2. build ..............................
3. water related ..............................
4. information ..............................

(1x5=5)

**Q12.** Use the correct phrase from the box. and fill in the b lank spaces of the following dialogue

| checking on, agree with, should be, sitting at, Not quite, bored with, have to, way of, just as. |
|---|

Videsh:- Nice meeting you, How is your new job?
Nilupul:- Oh! I don't like it I'm getting (1) .................... it, In fact I'm looking for something new.
Videsh:- Why don't you like it?
Nilupul:- Well, I hate (2) .............................. a computer all day. It makes you inactive.
Videsh:- Does that mean you like some out-door job?
Nilupul:- (3) .............................. I, don't mind an office job, but with more interesting things to do.
I (4) .............................. monotony.
Videsh:- What you say is correct. I quite (5) ..............................
you. It's dull to work like that.
Nilupul:- I feel that work should give one pleasure. It is then you have work satisfaction.
Videsh:- But, can you leave this job (6) .............................. you. feel?
Nilupul:- Well, I will (7) .............................. give a months notice. That's the agreement.
Videsh:- I think you (8) .............................. reading the advertisements on the Sunday papers now.
Nilupul:- That's one way but I've been (9) .............................. the Internet too.
Videsh:- Yes, that's a fine (10) .............................. finding information. Hope you'll find a good job soon. Good Luck!

(1x10=10)

**Q13.** Your Social Studies teacher took you on a trip to see the historical sights of Sri Lanka. Write a short account of the trip using about 100 words including the following:-

- how you went/who went
- what you saw
- what you did
- what you felt

..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................

(5 marks)

**Q 14.** Read the following passage and answer the questions given below:-

George Bargery the Grocer

When people in the neighbourhood needed something in a hurry, such as tea, sugar and soap, and had no time to go to the big shops in the main road or town, they went to Mr.Bargery's shop. So he kept a large number of things, but not a large quantity of things.

Behind the shop was a living - room. A comfortable room this was, with a cheerful fire burning at the fire - place. There Mr Bagrer's family had meals, and they sat and chatted in the evenings. The family consisted of Mr and Mrs Bargery and their four children, mary, Jane, Harry and Harris.

Mr Bargery was a man with a red face, a stout figure and very tall but nobody would call him handsome. He was never found in the shop without an apron. His customers called him "Mr Bargery" before his face, and "Old George" behind his back.

Old Mr.Bargery's shop was not a very prosperous one. That was because people imposed on his kindness. When they were out of work or had not enough money they would ask Mr.Barbery to let them have goods without paying for them at the time. They promised to pay sometime in the future. Mr Bargery always made the same reply. "I never give credit" Then they would talk about their hungry children at home. That softened Mr Bargery. "Ah well" he would say, "I'll" do this once; but remember never again. "Then he would give the goods make a note of it on paper, and lose the paper. Sometimes the people paid him, but very often they did not. And he never pressed for money. So Mr Bargery was a good man but not a good shop - keeper.

Say whether the following statements are true of false. put "T" for true statements and "F" for false statements in the box given in front.

1. Mr. Bargery was a grocer ☐
2. He never kept a large number of goods but a large quantity ☐
3. Mr.Barger was a king -hearted man ☐
4. People called him handsome ☐
5. He was a good shop - keeper ☐

Answer the following questions in the given space.

6. What did Bargery look like?
..............................................................................
..............................................................................
..............................................................................

7. What did he always wear when he was in the shop?
..............................................................................
..............................................................................
..............................................................................

8. What names did people use to call him in his face and at his back?
..............................................................................
..............................................................................
..............................................................................

9. What did Mr.Bargery always say to people who asked things free of charge?
..............................................................................
..............................................................................
..............................................................................

10. Write a work form the passage that would have the similar meaning to the following
a. Doing well ..............................
b. Gicing things for later payment ..............................

(1x10=10)

**Q15.** Rewrite the following passage putting the words in brackets in the correct tense. One is done for you.

One evening a few weeks ago, while I (1) <u>was sitting</u> (sit) alone at home reading a book, someone (2) .............................. (knock) at the door. when I (3) .............................. (open) it, I found a stranger. The man who (4) .............................. (stand) at the door (5) .................. (want) to sell some brushes. I (6) .............................. (not have) any money, and also I (7) .................... (not have) any brushes. So I (8).................... (ask) him politely to go. The manwho (9) .................... (look) rather poor (10) .................... (keep) on talking. So I (11) .............................. (order) him to go away at once.

(1x10=10)

**Q16.** Write a composition on any one of the following topics using not more than 200 words.

- ❑ Value of World Heritage Sites
- ❑ Respecting Elders
- ❑ Helping Street Children

(10 marks)

**P.N.SHUTHARSON** SPL. TRD. ENG, DIP - IN - ENG
J/VEMBADI GIRLS' HIGH SCHOOL.

# அரியாலையில் தொடர்ந்தும் பதற்றம் நிலவுகின்றது!

யாழ்ப்பாணம்—

அரியாலைப் பகுதியில் தொடர்ந்தும் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதால் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவிவருகிறது.

கடந்த 3 ஆம் திகதி அரியாலை கண்டி வீதியில் இராணுவ பவுஸர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதைத் தொடர்ந்து அரியாலை கண்டி வீதிப் பகுதியில் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதோடு, மறுநாள் பிற்பகல் வீதியால் செல்வோரை மறித்து அடையாள அட்டைகளைப் பரிசோதித்தும், மாம்பழம் சந்தி, தபாற்கட்டைச்சந்தி, நெடுங்குளம் ஆகிய பகுதிகளை அண்டியுள்ள சில வீடுகளில் சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை, கடந்த ஞாயிறு இரவு 10.30 மணியளவில் அரியாலை தபாற்கட்டைச் சந்தி, நெடுங்குளம் சந்தி ஆகிய பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டதால் அரியாலைப் பகுதி மக்கள் பதற்றத்துடன் இரவைக் கழித்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

அரியாலை தபாற்கட்டைச் சந்திப் பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்த வான் ஒன்றை துரத்திச்சென்ற இராணுவத்தினர் அதனை இலக்குவைத்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகவும், பின்னர் அந்த வானின் சாரதியான அரியாலையைச் சேர்ந்தவர் கடுமையாகத் தாக்கப்பட்டு பின்பு விடுவிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (55)

## தென்னம் நாற்றுகள் அன்பளிப்பு

வடமராட்சி—

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவில் தென்னங்கன்றுகளை விநியோகிக்க வேர்ல்ட் விஷன் நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்த வகையில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான மருதங்கேணிப் பகுதிக்கு 15 ஆயிரம் தென்னங்கன்றுகளையும், இராணுவ கட்டுப்பாடுப் பிரதேசமான குடத்தனை, மணற்காட்ப் பகுதிக்கு 10 ஆயிரம் தென்னங்கன்றுகளையுமாக 25 ஆயிரம் தென்னங்கன்றுகளையும், கனிமரங்கன்றுகளையும் விநியோகிக்கவுள்ளதாக தெரியவருகிறது. (17)

# அனுமதி அட்டைகளை பெறுவதில் அசிரத்தை!

யாழ்ப்பாணம்—

கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள போதும், பாடசாலை மாணவர்கள் இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்டவில்லை என பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையால் பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்படுகிறது.

இதேவேளை, தற்போது நடைபெற்றுவரும் ஆண்டிறுதிப் பரீட்சை மற்றும் முன்னோடிப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் தாமதமாகவே சமூகம் தருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன!

சுதுமலை—

ஜி.ரி.இதற் நிறுவனத்தால் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட 6 கிராம அலுவலர் பிரிவுகளில் 60 நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வறுமைக் கோட்டுக்குட்பட்ட, அங்கவீனர்களை உள்ளடக்கிய பல குடும்பங்களையே முதன்மையான பயனாளிகளாக தெரிவு செய்து, அவர்களது நிரந்தர காணிகளிலேயே வீடமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளன. தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகளையே மேற்படி நிறுவனம் அமைத்துக் கொடுக்கவுள்ளது.

நீர்வேலி வடக்கு, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் வடக்கு, அச்சுவேலி தெற்கு, புத்தூர் வடக்கு, பத்தமேனி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் இதற்கென 60 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேற்படி நிறுவனத்தால் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தில் அமைக்கப்படவுள்ள வீடமைப்புப் பணிகள் மிக விரைவாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

# நாய்களுக்கு கருத்தடை

மானிப்பாய்—

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கான இனப்பெருக்கத்தைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக - மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் எம்.கே.சாந்தசீலன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக தெருநாய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளமையால், விசர் நாய்களின் பெருக்கமும் அதிகரித்துள்ளது. பொது மக்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும், அச்சுறுத்தலாகவும் மேற்படி தெருநாய்கள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் அந்தந்த பிரதேச கால்நடை மிருக வைத்திய நிலையங்களில் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கு கருத்தடை செய்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென ஆண் நாய் ஒன்றுக்கு 250 ரூபாவும், பெண் நாய் ஒன்றுக்கு 175 ரூபாவும் அறவிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

## பாராட்டு விழா

உடுவில்—

வலிகாமம் கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் க.நடராசாவை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, நாளை பிற்பகல் 3 மணிக்கு இராமநாதன் பாடசாலையில் நடைபெறும்.

இந்த நிகழ்வு வலிகாமம் வலயத்தில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (101)

## இரத்ததானம்

திருநெல்வேலி—

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கமும், திருநெல்வேலி வர்த்தகர் சங்கமும் இணைந்து யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்கியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க கட்டடத்திற்கு வருகைதந்த மேற்படி வைத்தியசாலை இரத்த வங்கி வைத்தியர்களிடம், ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் இரத்ததானம் வழங்கியுள்ளனர். (63)

## திருவெம்பாவை ஆரம்பம்

கொக்குவில்—

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை திருவெம்பாவை பூசைகள் ஆரம்பமாகவிருக்கிறது.

17 ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடர்ந்து 10 தினங்கள் அதிகாலைகளில் பூசைகள் நடைபெறுமென பரிபாலன சபை அறிவித்துள்ளது. (206)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்—

டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையுடன் இணைந்து, யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் இவ்வாண்டில் ஆரம்பம்முதல் செயற்படுத்திவந்த பாடசாலைசார் சுகாதாரமும், சமூக உளவியலும் என்ற திட்டத்தின் ஆண்டு விழா நிகழ்வு நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நாளை காலை நடைபெறவுள்ளது.

## பரிசளிப்பு நிகழ்வு

மானிப்பாய்—

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தின் சைவத் திருமுறை விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆனைக்கோட்டை காசி காண்டமட சிவன்கோயிலில் நடைபெறவுள்ளது.

## கண்காணிப்புக்குழு கூட்டம்

யாழ்ப்பாணம்—

சுகாதாரத் திணைக்களத்தால் மாதாந்தம் நடத்தப்படும் நிறுவனத் தலைவர்களுக்கான மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டம், திட்டமிட்டபடி இன்று பிற்பகல் 2 மணியளவில் வழமை போன்று சுகாதாரப் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இதில் தவறாது சகல நிறுவனத் தலைவர்களையும் சமூகமளிக்குமாறு, யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# திருவாசக விழா பண்ணிசைப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன!

வடமராட்சி—

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும்,திருவாசக விழா பண்ணிசைப் போட்டி ஜனவரி 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பங்குபற்றும் மாணவர்கள் தாங்கள் கல்விகற்கும் தரம் (2006 இல்), பாடசாலை, பிறந்த திகதி என்பனவற்றைப் பாடசாலை அதிபர் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி 20.12.2005 இற்கு முன் தபால் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கலாம்.


பிரிவுகள் ஆண்டு 5, 6 வரை விடயம் சிவபுராணம், ஆண்டு 7, 8 வரை திருவெம்பாவை, ஆண்டு 9, 10 வரை திருப்பள்ளியெழுச்சி.

நடுவர்கள் கேட்கும் பாடல்களை மட்டும் மோகன ராகத்திற்கு பாடிக்காட்டுதல் வேண்டும். அத்துடன் பண்ணிசைப் போட்டியிற் பங்குபற்றும் ஒவ்வொரு பிரிவு மாணவர்களும் சமய பாடம் தொடர்பான பொது அறிவு எழுத்து மூலம் பரீட்சிக்கப்படுவர். பண்ணிசை, சமய அறிவு இரண்டும் பரீட்சிக்கப்பட்டே முடிவுகள் பெறப்படும். பண்ணிசைக்கு கூடிய காத்திரம் வழங்கப்படும்.

போட்டி எதிர்வரும் முதலாம் திகதி ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டு வெற்றிபெறும் மாணவர்களுக்கு 06.01.2006 வெள்ளிக்கிழமை நிகழும் திருவாசக விழாவில் - பணத்தொகையும், பரிசில்கள், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி - திருவாசகப் போட்டிக்குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, செல்வசந்நிதி தொண்டமானாறு. (17)



சுன்னாகம் கதிரமலை சிவன்கோயிலில் அண்மையில் நடைபெற்ற மெய்கண்டதேவர் குருபூசை நிகழ்வில் பண்ணிசை வழங்கிய மாணவிக்கு மாவட்ட இணைப்பாளர் நாகராசா பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : பி.டாவின் பெக்கர்
முகவரி : புங்குடுதீவு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு:



பெற்றோர் ஒப்பம்



கோண்டாவில் கிழக்கு கலைமகள் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாணவர்களின் ஆரம்ப உடற்பயிற்சியை படத்தில் காணலாம். (82)

# ஒவ்வொரு மனிதனும் முயற்சியின் மூலம் வாழ்க்கையில் முன்னேற வேண்டும்

## வவுனியா கல்வியியற் கல்லூரி பீடாதிபதி பேனாட் தெரிவிப்பு

வவுனியா—

வன்னி மாவட்டத்தின் முதல் கலாநிதியாக முல்லைமணி விளங்குவது மகிழ்ச்சிக்குரியது. யாழ். பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியது பாராட்டுதற்குரியது என வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கே.பேனாட் தெரிவித்தார்.

மூத்த கலைஞரும், இலக்கிய வாதியுமான வே.சுப்பிரமணித்திற்கு யாழ். பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியதற்கான பாராட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கல்வியில் உயர்பவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு.

ஆகவே, ஒவ்வொருவரும் கல்வியில் உயர்வடைய முயற்சிக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் முயற்சியின் மூலமே வாழ்க்கையில் முன்னேற முடியும்.

முல்லைமணிக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டிருப்பது மிக மகிழ்ச்சிக்குரியது. இது வன்னிப் பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட கௌரவமாகும்.

இது போன்று பலர் வன்னி மாவட்டத்திலே உருவாக வேண்டும். எமது மண்ணுக்குப் பெருமை தேடித்தர வேண்டும்.


இச்சிந்தனை இங்குள்ள ஒவ்வொருவர் மனதிலும் ஏற்பட வேண்டும். முல்லைமணி பல்லாண்டு வாழ்ந்து எமது மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும். அவரது வாழ்வு சுபீட்சம் பெறவேண்டும் எனத் தெரிவித்தார்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி தமிழ் மன்றமும், வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து நடத்திய இந்தப் பாராட்டு விழா தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைமணிக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் நன்றியுரையை ஏ.பவப்பிரியா நிகழ்த்தினார். இறுதியில் கலைநிகழ்வு இடம்பெற்றது.

# வத்திக்கான் பிரதிநிதி வன்னிக்கு விஜயம்



முல்லைத்தீவு—

வத்திக்கான் நாட்டின் பிரதிநிதி நேற்று முன்தினம் வன்னிக்கு வருகை தந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் முகமாலை சோதனைச் சாவடியூடாக வருகை தந்த இவர், சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களையும், கிறிஸ்தவ தேவாலயங்களையும் பார்வையிட்டார்.

குறிப்பாக சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாகப்பர் தேவாலயத்தையும் பார்வையிட்டார். முல்லைத்தீவின் - சிலாவத்தை கிராமத்திலுள்ள சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாமுக்கும் சென்றுள்ளார்.

அங்கு அவர் சிலாவத்தை மக்களால் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டார். பின் அங்கு தங்கியிருந்த மக்களிடம் சுனாமி அனர்த்த துயரத்தை கேட்டறிந்து ஆறுதலும், ஆசியும் கூறி விடைபெற்றார்.

வத்திக்கானின் பிரதிநிதியாக தமிழீழம் வந்த இவருக்கு தமிழீழ காவற்துறையினர் சிறப்பு பாதுகாப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி மாவட்ட களஞ்சியத்தில் பாவனைக்கு உதவாத மாமூடைகள்!

கிளிநொச்சி—

மக்களின் உணவுத் தேவைக்கென ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட நிறுவனத்தின் கிளிநொச்சி களஞ்சியத்திலுள்ள கோதுமை மா மக்கள் பாவனைக்கு உதவாதவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தக் களஞ்சியத்தில் ஏற்கனவே இருப்பிலுள்ள மாமூடைகளுடன், கடந்த 3, 4ஆம் திகதிகளில் வந்துசேர்ந்த 600இற்கும் மேற்பட்ட மா மூடைகளும், அத்துடன் கடந்த திங்கட்கிழமை வந்தடைந்த ஒரு தொகுதி மா மூடைகளும் மக்களின் பாவனைக்குதவாத புழுப்பிடித்த மா மூடைகள் என கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதாரப் பணிமனையின் சுகாதார அலுவலகர்கள் தெரிவித்துள்ளனர்.


இது பற்றிய உலக உணவுத் திட்ட கிளிநொச்சி பணிமனை வெளிக்கள அலுவலகரிடம் முறையிட்டபோது - இந்த மா மூடைகளை அழிக்க முடியாதுள்ளது எனவும், அவற்றை அரித்து சுத்திகரித்து மக்களுக்கு வழங்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனைவிட மோசமான உணவுகளை உண்ட கிளிநொச்சி மக்களுக்கு இந்த மா மோசமானது அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

அரித்து புழுக்களை அகற்றினாலும் அதன் முட்டைகளை அகற்ற முடியாது எனவும்-பத்து நாட்களுக்கு ஒரு முறை அவை புழுக்களாக வெளிவரும் எனவும் சுகாதார அலுவலகர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை மக்களுக்கு விநியோகிப்பது என்பது ஐ.நாவின் உலக உணவுத் திட்ட நடைமுறைகளுக்கு மாறானவை என்பது குறிப்பிடத்தக்கது.



சர்வதேச குழந்தைகள் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், முன்பள்ளி மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து வவுனியா மாவட்ட முன்பள்ளி மாணவர்களுக்கிடையிலான உடலசைவு நிகழ்வொன்றை அண்மையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நிகழ்த்தினர். நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உட்பட கலந்து கொண்ட பிரமுகர்களை படத்தில் காணலாம்.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### டிசெம்பர் 07

1894:சுயஸ் கால்வாய் உருவாகக் காரணமாக இருந்த பிரான்சைச் சேர்ந்த பொறியியலாளர் பொரிடினட் மேரி டி லெஸ்ஸெப்ஸ் பிரான்ஸின் லாசெநெய் என்ற இடத்தில் காலமானார்.

1907:முதன் முதலாக குத்துச்சண்டைப் போட்டி ஒன்றின் போது நடுவர் ஒருவர் நியமிக்கப்பட்டார். லண்டனில் தேசிய விளையாட்டுக் கழகம், டாமி பர்ன்ஸ் என்பவருக்கும் கன்னர்மாயிர் என்பவருக்குமிடையில், நடத்திய குத்துச் சண்டைப் போட்டியில்,மேடையில் வைத்தே யூஜின் கோரி என்பவரை நடுவராக நியமித்தது.

1917:அமெரிக்கா - ஒஸ்திரியா மீது போர் தொடுத்தது.

1931:குறைந்த அளவு கூலியுடனாவது வேலைவாய்ப்புத் தருமாறு கேட்டு,அமெரிக்காவில் ஜனாதிபதி ஹீவதிடம் கோரிக்கை சமர்ப்பிக்கச் சென்ற பட்டினி ஊர்வலத்தினர் வெள்ளை மாளிகையை நெருங்க விடாமல் திருப்பி விடப்பட்டனர்.

1941:ஜப்பான் விமானம் தாங்கிக் கப்பல்களிலிருந்து வந்த போர் விமானங்களினால் காலையிலேயே பேர்ல் துறைமுகம் தாக்கப்பட்டது. அமெரிக்காவின் பசுபிக் கடற்படைப்பிரிவு அங்குதான் தளம் அமைத்திருந்தது. இத்தாக்குதலில் அமெரிக்காவின் 8 போர் கப்பல்களும், 190 விமானங்களும் அழிக்கப்பட்டன. 2400 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். 1200 வீரர்கள் காயமடைந்தனர் பேர்ல் துறைமுகத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்பதே ஜப்பான் சரணடையும் வரை அமெரிக்காவின் போர் முழக்கமாக இருந்தது.

1961: 18 ஆபிரிக்க நாடுகளையும் தமது அமைப்பில் இணைத்துக் கொள்ள ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகள் உடன்பட்டன.

1968:அமெரிக்காவின் சின்சினாட்டி பல்கலைக்கழக நூலகத்தில் இருந்து டாக்டர் ஜே.கூற்றி என்பவர் 1823ல் ஒரு புத்தகத்தை இரவல் பெற்றுச் சென்றிருந்தார். 145 ஆண்டுகளுக்குப் பிறகு அவரது கொள்ளுப் பேரன் அப்புத்தகத்தை நூல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

1970:போலந்தும் மேற்கு ஜேர்மனியும் நட்புறவு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தப்படி, ஜேர்மனி, தனது பகுதியிலுள்ள 40,000 சதுர மைல் பரப்பை போலந்திடம் ஒப்படைக்க ஒத்துக் கொண்டது.

1970:இராணுவத்தினரது மேற்பார்வையில் பாகிஸ்தானில் முதன் முதலாகப் பொதுத்தேர்தல் நடைபெற்றது.

1972:அமெரிக்கா மூன்று விண்வெளி வீரர்களுடன், அப்பலோ - 7 என்ற விண்கலத்தைச் செலுத்தியது. இது 11 நாட்களில் 163 முறை பூமியை வலம் வந்தது.

☆ :காஷ்மீர் போர்நிறுத்தக் கோடு பற்றி உடன்பாடு காணப்பட்டதனால், இந்தியா - பாகிஸ்தான் படைகள் தாம் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து பின்வாங்க ஆரம்பித்தன.

1975:இந்தோனேசியா கிழக்குத் தீமோரின் மீது படையெடுத்தது. கிழக்குத் தீமோரில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்து, ஏராளமானோர் அகதிகளாக மேற்கு தீமோரில் தஞ்சம் புகுந்ததே காரணமாகும்.

1981:முதன் முதலாக அதிவேக பயணிகள் ரயில் பிரிட்டனில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1982: விஷ ஊசி ஏற்றுவதன் மூலம் மரணதண்டனை நிறைவேற்றும் முறை முதன்முதலாக டெக்ஸாஸில் ஃபோர்ட்வொர்த் சிறைச்சாலையில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

1987: அணு ஆயுதக்குறைப்புப்பற்றி பேச்சு நடாத்த, ரஷ்ய அதிபர் கோர்ப்பச்சேவ் வொஷிங்டன் வந்து சேர்ந்தார்.

1988: ஆர்மினியாவில், துருக்கி சோவியத் எல்லைக்கருகில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. 50,000 க்கும் மேற்பட்டவர்கள் இறந்து போயினர்.

1995: இந்தியா தானாகவே வடிவமைத்த மூன்றாவது தகவல் தொடர்பு செயற்கைக் கோளான இன்ஷாட் - 2 சியை விண்ணில் செலுத்தியது.

தொகுப்பு : - சந்துரு

# நெல் உற்பத்தியில் ஆர்வம் காட்டும் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள்

முல்லைத்தீவு—

2005, 2006 பெரும்போக நெல் உற்பத்தியில் விவசாயிகள் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

சிறுபோகத்தில் உற்பத்தி செய்த நெல் இன்னமும் சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. நெல்லைக் கொள்வனவு செய்து வந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நெல் கொள்வனவை தற்காலிகமாக நிறுத்தியுள்ளன என அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நெல் கொள்வனவு செய்யப்படாத நிலையில், விவசாயிகள் பெரும்போக நெல் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ப.நோ.கூ.சங்கங்கள் நெற்கொள்வனவை மேற்கொண்டால் விவசாயிகள் நெருக்கடிகளின்றி மேலும் ஆர்வத்துடன் பெரும் போக நெல் உற்பத்தியை மேற்கொள்ள முடியும் எனவும் இந்தப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# கருங்கண்டல் கிராமத்தில் திலீபன் மருத்துவமனை

மன்னார்—

மன்னார் - கருங்கண்டல் கிராமத்தில் திலீபன் மருத்துவமனை நிரந்தரமாக இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்தக் கிராமத்தில் தற்காலிகமாக இயங்கிவந்த இந்த மருத்துவமனை தற்போது நிரந்தரமாக இயங்க ஆரம்பித்துள்ளதால் கீரிசுட்டான், முள்ளிக்குளம், வலயன்கட்டு, பரிசன்குளம் ஆகிய கிராமங்களிலுள்ள பெருமளவு மக்கள் நன்மையடைந்துள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் இந்த மருத்துவமனை நிரந்தரமாகச் செயற்பட ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

வைர வரிகள்

?வீரசுதந்திரம் வேண்டிநிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.
- தமிழீழத் தேசியத் தலைவர்

## நமது நோக்கு

### எரியும் பிரச்சினைகளுக்கு எண்ணெயூற்றும் அரசு!

போர் நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து மீறி வரும் படைத்தரப்பினரதும், அவர்களின் துணைப் படையினரதும் குடாநாட்டு மக்களுக்கு எதிரான தொடர் நடவடிக்கைகள காரணமாக மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் கொந்தளிப்பு நிலையும், அதன் எதிரொலியான கிளர்ச்சி நடவடிக்கைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சூழலில், நிலைமையின் உத்வேகத்தைத் தணிக்கும் நோக்கில் அரசு தரப்போ, படைத்தரப்போ ஆழ்ந்த அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

நேற்று முன்தினம் இது தொடர்பாகப்பேசி நிலைமையைச் சீராக்கும் நோக்கில் பிரச்சினைகள் குறித்து ஆராய மேற்கொள்ளப்பட்ட சந்திப்பு ஏற்பாட்டுக்குச் சமுகம்தர யாழ்.படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் அவர்கள் தவறியதால், அந்த அவசியமான சநதிப்பு ரத்துச் செய்யப்பட்டது. இதற்கு ஒரு காரணத்தைக் கூறி இராணுவத் தளபதி சமாளிக்க முயன்றாலும், அதில் அர்த்தமெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் இந்தச் சந்திப்புக்கென முகமாலை சூனியப் பிரதேசத்துக்கு வருகை தந்த பின்னரும், இராணுவத்தளபதி அந்தச் சந்திப்பைத் தவிர்த்துக் கொண்டமையானது பல்வேறு சந்தேகங்களுக்கு இடமளிக்கவே செய்கிறது.

இது நிலைமையின் தீவிரத்தைத் தணிக்கும் நோக்கில் படைத்தரப்பினரின் நடவடிக்கைகள் இருப்பதாகத் தெரியவில்லை. வடமராட்சியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஊடாகப் பாரிய மண் அணையொன்றினை அமைத்துவரும் படையினரின் செயல், மாணவர்களிடையே ஆத்திரத்தை ஏற்படுத்திப் பிரச்சினையைப் பெரிதாக்கி மீண்டும் ஒரு யுத்த காலச்சூழலை உருவாக்கும் உள்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதென்பதே மக்களின் கருத்தாக உள்ளது.

இதேவேளை - மண் அணை அமைக்கும் படையினரின் செயல் தமது அமைதியான கல்விக்கு வீடுக்கும் அச்சுறுத்தல் என அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் மீதான படையினரின் தாக்குதல் மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு - ஒருவகையான ஆக்கிரமிப்பு வெறியின் வெளிப்பாடு என்பதால் இந்த மேலாதிக்க நடவடிக்கையை நீக்கக்கோரி போராட்டம் ஒன்றை மேற்கொள்ள தமிழ் மணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளமையானது நிலைமை மேலும மோசமாகப் போகின்றது என்பதற்கான அறிகுறியாகவே உள்ளது.

உண்மையில் பொதுமக்களும், மாணவ சமூகத்தினரும், படைத்தரப்பினரின் செயற்பாடுகளால் அதிருப்தியும், சினமும் கொண்டுள்ள நிலையை உடனடியாக உரியமுறையில் தணிக்கப்படாவிடின் அதன் எதிர்கால விளைவுகள், சமாதான முயற்சிகளின் வருங்காலம் குறித்து எவரும் நம்பிக்கை கொள்ள முடியாது.

தமிழ்மக்களின் உரிமை வேட்கையை, நியாயமான கோரிக்கைகளை, நேர்மையான முறையில் தார்மீக சிந்தனையுடனும், ஜனநாயகப் பண்புடனும் அணுகித் தீர்வுகாண புதிய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்பினை, தந்திரோபாய ரீதியில் ஏமாற்றிக் காலங்கடத்தி, கடந்த அரசு போன்று 'பேய்க்காட்ட' நினைக்குமேயானால் - அது பேரினவாதிகளும், அவர்களுக்குத் தலைமை தாங்கும் அரசும், தமக்குத் தாமே மண்ணள்ளிப்போடும் நிகழ்வாகவே முடியும் என்பதற்கான முன்னறிவிப்பாகவே இன்றைய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன என்றே எண்ணத் தோன்றுகிறது.

இந்த நெருக்கடியான கட்டத்தில் சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கையரசுக்கு விடுத்துள்ள கோரிக்கையொன்றில், இலங்கையின் ஒட்டுமொத்த சூழ்நிலை மிகவும் மோசமானதாகவும், பலவீனமானதாகவும் உள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளதுடன், விடுதலைப் புலிகள் வழங்கியுள்ள கால அவகாசத்தைக் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டுமெனவும் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

'கெடுகுடி சொற்கேளாது' என்பவர்கள் தாங்கள் கெடுகுடிகள் அல்ல என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு இப்போது அரசுக்கும், ஜனாதிபதி அவர்களுக்குமே உரியதாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




### உள்ளதைச் சொல்லியே தீரவேண்டும்...!

# அகௌரவப்படுத்தப்படும் கௌரவப்பட்டம்!

மக்களிடம் மிகுந்த நன்மதிப்பைப் பெற்றவர்களுக்கும், சிறந்த சமூகத் தொண்டு புரிந்த - புரிகின்றவர்களுக்கும், பிரதிஉபகாரம் பாராத நல்மனம் கொண்ட சேவைக்காக அரசாங்கத்தின் சமூக சேவைகள் நீதி அமைச்சினால் வழங்கப்படும் மிகக் கௌரவம் வாய்ந்த பதவியே சமாதான நீதிவான் பட்டம் கொண்ட பதவியாகும்.

நீதிமன்ற நீதிவான் பதவி என்பது - சட்டங்கள் பலவற்றையும் படித்து நீண்டகாலமாக சிறந்த சட்டத்தரணியாக விளங்கி, அதன்பின் உயர்வு பெறுவது சிவில் நீதிவான் பதவியாகும்.

இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடு முதலாவது- பிரதி உபகாரம்பாராது சமூகத்திற்குச் செய்யும் சேவை. இரண்டாவது - ஊதியம் பெற்று செய்யப்படுகின்ற கடமையாகும்.



எனவே, சமாதான நீதிவான் பட்டம் என்பது - மக்கள் சேவைக்காக வழங்கப்படும் மகத்தான கௌரவிப்பாகும். ஆனால் இன்று அந்தப் பட்டம் பெற்ற பலராலும் தமக்கு சேவைகள் கிடைப்பதில்லை எனவும் தொல்லைகளே அதிகம் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். தேர்தல்கள் வரும்பொழுது தமது வாக்கு எண்ணிக்கையை கூட்டிக்கொள்வதற்காக ஒவ்வொரு அரசியல் கட்சியும் தாம் நினைத்த மாதிரி தமக்கு வேண்டியவர்கள் அனைவருக்கும் இந்தக்கௌரவப பட்டத்தை வாரிவழங்குகின்றனர்.

பதவிக்குரியவரின் தகுதி, வயது, கல்வித்தரம், அந்தஸ்த்து உண்மையிலேயே அந்த நபர் சமூக சேவை நோக்கம் கொண்டவர்தானா என்பது போன்ற அடிப்படைத் தகுதிகளைக் கூட ஆராய்ந்து பார்க்காது, தமக்குத் தெரிந்தவர்கள், வேண்டியவர்கள், மாமன், மச்சான், அண்ணன், தம்பி என இந்தப்பட்டத்தைக் கண்டபடி வழங்கியதால் இன்று அந்தக் கௌரவப்பதவிக்குரிய மதிப்பு மக்கள் மத்தியில் காணப்படவில்லை.

1990ஆம் ஆண்டிற்கு முன் யாழ்ப்பாணத்தில் சமாதான நீதிவான் பட்டம் பெற்றவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடியளவிற்கு கிராமத்திற்கு அல்லது நகரத்திற்கு ஒருவரே காணப்பட்டனர். அன்று அவர்களிடத்தில் மக்கள் அதிக மதிப்பு வைத்திருந்தனர். இன்று வீட்டிற்கு வீடு ஜே.பி இருப்பதால் சமூகத்தில் பல சச்சரவுகள் தோன்றுகின்றன.

ஒரு சிலர் தமக்கு வழங்கப்பட்ட இந்தப் பாரிய கௌரவத்தை - கடமை, கண்ணியத்துடன் செய்கின்றனர். பலர் இதனைத் தமக்கு வழங்கப்பட்ட ஓய்வு நேரப் பொழுதுபோக்காகவும், ஓய்வூதியம் பெறும் காலத்தில் மேலதிக வருமானம் பெறும் தொழிலாகவும், பகுதிநேர வேலைவாய்ப்பாகவும் கருதி மக்களிடம் பணம் வசூலிப்பதையே நோக்கமாகக் கொண்டு "சேவை" புரிகின்றனர்(?!) இவர்கள் மக்களுக்கும், சமூகத்திற்கும் செய்யும் சேவை இதுதான்.

ஜே.பி பட்டம் பெறும் போது - நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட வாசகத்தை நீதி மன்ற வாசலுக்கு வரமுன்பே மறந்து விடுகின்றனர். அல்லது உதாசீனம் செய்து விடுகின்றனர். பட்டம் பெற்ற நபரை அந்தக் கிராம மக்கள் பல வழிகளாலும் வாழ்த்தி விழாவெடுக்கின்றனர். ஏனெனில் தமது சிறிய பிரச்சினைகளை இவர்கள் மூலம் சுலபமாகத் தீர்த்து விடலாம் என்ற ஆசையினால்.

ஆனால் இப்படிப் பட்டம் பெற்றவர்களாலேயே தமக்கு பல பிரச்சினைகள் எழுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

> ஒரு சிலர் தமக்கு வழங்கப்பட்ட இந்த பாரிய கௌரவத்தை கடமை கண்ணியத்துடன் செய்கின்றனர். பலர் இதைத் தமக்கு வழங்கப்பட்ட ஓய்வு நேர பொழுது போக்காகவும், ஓய்வூதியம் பெறும் காலத்தில் மேலதிக வருமானம் பெறும் தொழிலாகவும், பகுதிநேர வேலைவாய்ப்பாகவும் கருதி மக்களிடம் பணம் கறப்பதையே நோக்கமாகக் கொண்டு "சேவை" புரிகின்றனர். இவர்கள் மக்களுக்கும் சமூகத்திற்கும் செய்யும் சேவை இதுதான்.

அதாவது - பொது இடங்கள் என்றும் பாராது, தமது அந்தஸ்து, பதவியை பற்றிச் சிந்திக்காது, கீழ்த்தரமான - பண்பற்றவார்த்தைகளைப் பிரயோகிப்பது, அநாவசியமாகவும் ஒருதலைப்பட்சமாகவும், அக்கம் பக்கத்து வீட்டுப் பிரச்சினைகளில் தலையிடுவது,

ஒரு ஆவணத்தில் உறுதிப்படுத்தி நற்சான்று வழங்கி கையொப்பமிட 500 ரூபா அல்லது 1000 ரூபா தரவேண்டுமென பேரம் பேசுவது, தன்னால் எதுவும் செய்யமுடியும் என்ற திமிர் வலிமையை காட்டுவது போன்ற அநாகரீக, அசிங்கமான செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் தென்பகுதியில் ஒரு சமாதானநீதிவான் - பாலியல் வல்லுறவில் ஈடுபட்டதாகவும், அவருக்கு நீதிமன்றம் கடுமையான தீர்ப்பு வழங்கியதாகவும் பத்திரிகை செய்தி மூலம் பார்த்து தெரிந்து கொண்டோம். இப்படிச் சமுதாய சேவைக்கு அருகதையற்றவர்களை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

'மக்கள் சேவையே மகேசன் சேவை' என உபதேசம் செய்பவர்கள் 'படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்' என்பது போலவே சமூகத்திற்குச் சேவை செய்கின்றனர்.

இவர்களின் இச்செயல் உண்மையில் சேவையுணர்வுடன் கிடைத்த கௌரவப்பட்டத்தை வைத்து பணியாற்றுபவர்களுக்கும், கவலையையும், தலை குனிவையும் ஏற்படுத்துவதாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

— சந்தானம் —

மனித கௌரவம், சுதந்திரம், சமத்துவம் என்பவற்றுக்குக் கௌரவமளிக்கும் பெறுமானங்களை மேம்படுத்தவும், நியமங்களைக் கட்டியெழுப்பவும் சமுதாயத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், வர்த்தகத் தலைவர்கள், வாண்மைமிகு தொழில் புரிவோர்மட்டுமன்றி, அனைத்து மக்களின் பங்களிப்பும் அவசியம் தேவையாகின்றது. இன்றைய நிலைமைகளில் எமது தேசத்திலே உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு பல்வேறு வழிகளிலும் ஏற்பட்டு வருகின்றது. பொது ஊடகங்கள் வன்செயல், அட்டூழியங்கள்,காணாமல் போதல், மக்கள் நலனைப் பேணுவதில் தவறியமை, சமூக, பொருளாதார, அரசியல பாரபட்சங்கள் போன்ற விடயங்களை ஆவணப்படுத்துவதில், அம்பலப்படுத்துவதில் முன்நின்று உழைக்கின்றன.

# மனித உரிமைகளால் ஜனநாயகம் வரையறுக்கப்படுகின்றது



இருபத்தியோராம் நூற்றாண்டின் முன்னெடுப்புகள் பாகுபடுத்தும் விழுமியங்களுக்கும், ஊன்றிய பொருளாதார அரசியல் நலன்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படும் மக்கள் போராட்டங்களின் மூலமே தத்தம் உரிமைகளை வென்றெடுக்க முடியும் எனபதானது முக்கியத்துவமான தேவையாகின்றது. சகல நாடுகளிலும் உள்ள எல்லா மக்களும் முழு உரிமைகளையும் கொண்டிருக்க வேண்டுமென்பதே இந்த நூற்றாண்டின் உலகளாவிய இலக்காகும். சர்வதேசப் பிரகடனமானது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே இத்தகைய ஒரு தூரநோக்கினைக் கொண்டுள்ளது. உலகம் முழுவதையும் உள்ளடக்கிய முறையில் இந்த இலக்கினை அடைந்து கொள்வதற்கான ஆற்றலையும், வளங்களையும், விழிப்புணர்வையும் இன்று உலகம் கொண்டிருக்கின்றது.

மனித உரிமைகளில் சமூகக் குழுக்கள் முன்னணியில் நின்று ஜனநாயக ஆட்சியில்லாத, பேருககு ஜனநாயகம் என்று சொல்லுகின்ற உரிமை மீறல்கள் தொடர்பான பொது மக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துவதுடன் சட்டங்கள் மற்றும் கொளகைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வலியுறுத்த வேண்டுமென்பது அவசியமாகின்றது. மக்களால் மக்களுக்கான ஆட்சியே ஜனநாயகமெனின், மனித உரிமைகள் மட்டில் அக்கறையும், பாரபட்சமின்மையும் உடையதான ஆட்சியே வேண்டப்படுகின்றது. இன்றைய உலக நாடுகளிடையே உரிமை மீறல்கள் தொடர்பான பொது மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு தொழில் நுட்பவியலும், சமூகங்களின் திறந்த தன்மையும் அந்த விதமான வலையமைப்புகளையும், கூட்டிணைவுகளையும் ஏற்படுத்துவதற்குச் சிறந்த வாய்ப்பினை வழங்குகின்றது.

மனித சுதந்திரங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குச் சட்டவாக்கங்கள் மட்டும் போதுமானவையல்ல. ஒவ்வொரு நாடும் அதற்குத் தனது சமூக ஏற்பாடுகளை வலுப்படுத்திக் கொள்ளுதல் மட்டுமல்லாது, ஒவ்வொரு மனிதனும் ஜனநாயக உரிமைகளைப் பெற்றவனாக சுதந்திரமானவனாக, சுபீட்சமானவனாக வாழவேண்டு மென்றும் எதிர் பார்க்கப்படுகின்றது. இதற்கான நியமனங்கள்,நிறுவனங்கள், சட்ட அமைபபுக்கள், பொருளாதாரச் சூழல் என்பன முக்கியமானவை. சட்டங்கள் மட்டும் மனித உரிமைகளுக்கான உத்தரவாதத்தைத் தரமாட்டாது. சட்டச் செயன் முறைக்குத் துணையான நிறுவனங்கள் தேவை. சட்ட அமைப்புகளை வலுப்படுத்தக் கூடிய சமூக நியமங்களையும், நீதி நெறிகளையும் கொண்ட கலாசாரம் என்பனவும் அத்துடன் வசதியான பொருளாதாரச் சூழலும் அவசியமானது.

மனித கௌரவம், சுதந்திரம், சமத்துவம் என்பவற்றுக்குக் கௌரவமளிக்கும் பெறுமானங்களை மேம்படுத்தவும், நியமங்களைக் கட்டியெழுப்பவும் சமுதாயத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், வர்த்தகத் தலைவர்கள், வாண்மைமிகு தொழில் புரிவோர் மட்டுமன்றி, அனைத்து மக்களின் பங்களிப்பும் அவசியம் தேவையாகின்றது. இன்றைய நிலைமைகளில் எமது தேசத்திலே உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு பல்வேறு வழிகளிலும் ஏற்பட்டு வருகின்றது. பொது ஊடகங்கள் வன்செயல், அட்டூழியங்கள்,காணாமல் போதல், மக்கள் நலனைப் பேணுவதில் தவறியமை, சமூக, பொருளாதார, அரசியல் பாரபட்சங்கள் போன்ற விடயங்களை ஆவணப்படுத்துவதில், அம்பலப்படுத்தவதில் முன்நின்று உழைக்கின்றன.

தீர்மானமென்றால் பாதிக்கப்படுகின்ற அனைவரும் அந்தத் தீர்மானத்தை எடுப்பதில் பங்கு பற்றுகிற உரிமையை நேரடியாகவேனும் அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவேனும் கொண்டிருக்க வேண்டுமென்பதே ஜனநாயகம் என்பதன் அடிப்படைக் கருத்து... இழக்கின்ற தொகுதியின ரைத் தீர்மானம் எடுப்பதில் பங்கு பற்றுவதிலிருந்து விலக்குவதானது ஜனநாயகத்தின் அடிப்படைக் கருத்தைத் தெளிவாக மீறுவதாகும் என்பார் ஆர்தர் லெவிஸ்கி எனும் அறிஞர்.

ஜனநாயகம் மட்டும் தான் பொருளாதார, சமூக, அரசியல், சிவில், மற்றும் கலாசார உரிமைகளென்ற ஐந்து வகை உரிமைகளும் மதிக்கப்படுவதுடன் ஒத்திசையக் கூடிய ஒரேயோர் அரசியல் ஆட்சிமுறை என்பதும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். உலகெங்கும் பரவி வருகின்ற தாராள ஜனநாயகப் போக்கு, மாற்றங்களைக் கூடியளவு சமுதாயத்துக்குரியவை ஆக்குகின்றன

சில உரிமைகளுக்கு அரசிலிருந்து பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற வழி முறைகள் தேவைப்படுகின்றன. மக்களால் மக்களுக்கான ஆட்சி என்பதாகக் கூறிக் கொண்டு மக்களின் உரிமைகள், கடமைகளை ஒடுக்குகின்ற ஆட்சியாகப் பித்தலாட்டம் நடத்துவதும் இன்று ஜனநாயகம் என்பதாக நாமம் சூட்டப்பட்டு கைக்கொள்ளப்படுகிறது.

ஜனநாயகமொன்றுக்கு வரைவிலக்கணம் கொடுக்கின்ற நான்கு அம்சங்கள் மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

**❋ சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் களை நடத்துதல், அரசியலில் பங்கு பற்றுவதற்கான உரிமை சகல மக்களுக்கும் நிறை வேற்றப்படுவதற்கு பங் களிப்புச் செய்தல் அவசிய மாகின்றது.**

**❋ அரசியல் / அரசின் பல்வேறு கிளைகளுக்கிடையில் அதிகாரங்களைப் பிரித்து வேறுபடுத்தல், குடி மக் களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதிலிருந்து அவர்களைப் பாது காக்க உதவுகின்றது.**

**❋ ஒரு வெளிப்படையான சிவில் சமுதாயத்தை ஊக்குவித்தல், சமாதானமாக ஒன்று கூடுவதற்கும் சேர்வதற்குமான உரிமை நிறை வேற்றப்படுவதற்கும் பங்களிக்கிறது.**

**❋ மக்களின் உரிமைகள், நலன்களுக்கு அழுத்தம் கொடுத்தல், பாரபட்சமற்ற தீர்வுகள, சமுதாய நலன் கருதிய அரசியல் நகர்வு களைப் பெரிதும் விரும்புகின்றது.**

இந்த உரிமைகள் - ஒன்றின் முன்னேற்றம் ஏனையவற்றின் வளர்ச்சிகளுடன் இயல்பான தொடர்புடையதாக, ஒன்றையொன்று பரஸ்பரம் வலுப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக ஊடகங்களின் தடையற்ற தன்மை பொதுவில் சிவில் சமுதாய நிறுவனங்களின் அபிவிருத்தியுடன் தொடர்புடையதாக இருக்கிறது. ஆனால் ஜனநாயகம் ஒரே வகையானதல்ல, ஜனநாயகத்தின் பல்வேறு வகைகளிலிருந்து நாடுகள் தததமது சூழ்நிலைகளையும், தேவைகளையும் பொறுத்து வெவ்வேறு நிறுவன ரீதியான கலப்புகளைத் தெரிவு செய்கின்றன.

எளிமையாக்கும் பொருட்டான பெரும்பான்மை ஜனநாயகம், உள்ளடங்கலான ஜனநாயகம் என்ற இரு பரந்த ஜனநாயக வகைகளை வேறுபடுத்தும் பயனுடையதாகிறது. பெரும்பான்மை ஜனநாயகத்தில் அரசாங்கம் பெரும்பான்மையால் ஆக்கப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகளில் அந்நியமான பாரபட்சங்களை எதிர்த்தல் ஏனைய மக்களின் பங்காகின்றது. பல்லின சமுதாயங்களில் அனேக சிறுபான்மைகள் நிரந்தரமாக விலக்கி வைக்கப்படுகின்ற, அவற்றுக்கெதிராகப் பாரபட்சம் காட்டப்படுகின்ற, அவற்றின் தேவைகளை, உரிமைகளை, அச்சங்களை ஓரங்கட்டுகின்ற ஆபத்து இங்குள்ளது. ஏனெனில் அது பெரும்பான்மைத் தனத்தைக் கொண்ட அரசியற் கட்சிகளின் தேர்தல் வாய்ப்புகளைப் பாதிக்கமாட்டாது. அது அநேக ஜனநாயகங்களில் காணப்படுவது போன்று வன்முறைக்கு வழிவகுக்கின்றது.

தாராள ஜனநாயக மாதிரியில் அரசுக்குப் பகிரங்க விசுவாசத்தை வெளிப்படுத்துவதில் தனிப்பட்டவர்கள் அனைவரும் தன்னுரிமையைக் கொண்டுள்ளஅதேவேளையில் - சமயம், இனம் அல்லது பிராந்தியம் மீதான அவர்களின் பல்வேறு தனிப்பட்ட விசுவாசங்களும் புறக்கணிக்கப்படுகின்றன. இது தீர்மானிப்பதற்கான பெரும் பான்மையின் இலாபம் கருதிய உரிமைக்கு முக்கியத்துவமளிக்கின்றது. ஜனநாயகமொன்றில் அளவில் சமமற்ற குழாம்கள் ஒன்றாக வாழ்கின்ற போது, அவற்றுக்கிடையில் முழுதொத்த அல்லது ஊடறுக்கின்ற அக்கறைகள் இல்லாதவிடத்து முரண்பாடுகள் தோன்றக்கூடும். ஜனநாயகம் ஆட்சிக்குத் திரும்பிய பின்னர் பெருமளவு வன்முறையைக் கண்ட இலங்கை போனற நாடுகள் இந்த ஆபத்துகளைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. அடக்கியாளப்படுகின்ற பொழுதுகளிலும், பெரும்பான்மை, சிறுபான்மை எனும் பாகுபாடுகளுக்கெதிரான சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளில், பெரும்பான்மை ஜனநாயகம் பல சந்தர்ப்பங்களில் கீழிறக்கப்பட்ட நிலைமைகளும் உண்டு.

எல்லா இன மக்களைப் பாதுகாப்பதுடன், எல்லாக் குடிமக்களுக்கும் பேச்சுச் சுதந்திரத்தையும் அவர்களின் பங்கேற்பையும் உறுதிப்படுத்துவதற்குமாக அரசியல் அதிகாரம் பல்வேறு வழி வகைகளில் பரவலாக்கப்பட்டுப் பகிர்ந்து கொள்ளப்படுகன்ற கோட்பாட்டில் கட்டியெழுபபப்பட்ட உள்ளடங்கலான ஜனநாயகமொன்றை எண்ணிப் பார்ப்பதும், கருத்து வெளியிடுவதும், கட்டமைப்புகளை ஏற்படுத்துவதும், கண் துடைப்பதுவுமாய் காலம் கடத்தும் அரசியல் நாடகங்களிடையே ஜனநாயகம் என்பது விளங்கிக் கொள்ள முடியாதது. உள்ளடங்கலான ஜனநாயக பெரும்பான்மையின் தேர்தல் ரீதியான ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட முரட்டுப் பலத்தையன்றி, கருத்தொருமைப்பாட்டுக்கும், உட்படுத்தலுக்கும் முயற்சி செய்வதன் மூலமான பிரதிநிதித்துவத்தின் தரம் வலியுறுத்த வேண்டிய அவசியமாகின்றது. உள்ளடங்கலான ஜனநாயகம் சிவில் சமுதாய நிறுவனங்கள், வெளிப்படையான ஊடகங்கள் உரிமைகளை நோக்காகக் கொண்ட பொருளாதாரக் கொள்கை, அதிகாரங்களைப் பிரித்தவை என்பவை ஊக்குவிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் போற்றுகின்றது. அவற்றின் மூலம் மனித உரிமைகளுக்கான வகை சொல்வதற்கான வழிமுறைகளை உருவாக்குகின்றது. *(தொடரும்...)*

**மாதங்கி**

மருத்துவம் பகுதி I

# நீரிழிவு நோயை அறிந்து கொள்வோம்

நீரிழிவு நோயாளிகளே! அவர்தம் உறவுகளே! மாணவர்களே! ஆர்வலர்களே! உங்களுக்காகவே நீங்கள் வைத்தியம் பெறும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் மற்றும் துறைசார்ந்தவர்கள் 11.12.2005 ஞாயிறுக்கிழமை காலை 08.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நீரிழிவு நோய்பற்றிய விளக்கங்களை அளிக்கவிருபதுடன், உங்கள் வினாக்களுக்கும் பதில் தரவுள்ளனர். இந்த இலவச அறிவூட்டல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அறிவைப் பெறுவதுடன், நீரிழிவு நோய் பற்றிய நூலினையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்காகவே நடத்தப்படும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன்பெறுங்கள். இதனையொட்டி இந்தக் கட்டுரைத் தொடர் பிரசுரமாகிறது.



## நீரிழிவு நோயின் அறிமுகமும் பரம்பலும்

நீரிழிவு நோயானது குருதியில் குளுக்கோசின் அளவு உயர்வதால் (Hyperglycaemia - High Blood sugar) ஏற்படுகின்ற சீர்படுத்தப்பட முடியாத வாழ்நாள் நோயாகும். குருதியில் குளுக்கோசின் அளவு உயர்வதற்கு உடலின் இன்சுலின் (Insulin) அளவு குறைவதோ அல்லது இன்சுலினின் தொழிற்பாட்டுக்கு எதிர்ப்புத் தன்மை ஏற்படுவதோ அல்லது இரண்டுமோ காரணமாக அமையலாம்.

அண்மைக்காலத் தரவுகளின் அடிப்படையில் 4 வீதமான உலக மக்கள் தொகையினர் நோயால் பாதிக்கப்படுகின்றனர். இது ஏறத்தாழ 143 மில்லியன் சனத்தொகையினர் ஆகும். இதன்படி இந்த நோயானது 2025 ஆம் ஆண்டளவில் ஏறத்தாழ 5.4 வீதமான மக்கள் தொகையினரைப் பாதிக்கும் என எதிர்பாக்கப்படுகின்றது. இது ஏறத்தாழ 300 மில்லியன் சனத்தொகையினர் ஆகும். இதில் 77 வீதமான மக்கள் தொகையினர் வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பர்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளைப் பெருமளவில் பாதித்திருக்கும் இந்த நோய் 2025 ஆம் ஆண்டளவில் தற்போது இருக்கும் 30 மில்லியனில் இருந்து 80 மில்லியனாக உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி உலகளவில் கூடியளவு நீரிழிவு நோயாளிகளைக் கொண்ட பிரதேசமாக மாற்றமடைகின்றது. உலகளாவிய ரீதியில் கூடியளவு நீரிழிவு நோயாளிகளைக் கொண்ட முதல் பத்து நாடுகளில் ஐந்து நாடுகள் ஆசியப் பிராந்தியத்துக்குரியவை.

## நீரிழிவு நோயின் வகைகளும் அதன் அறிகுறிகளும்.

1997 ஆம் ஆண்டு அமெரிக்க நீரிழிவு சங்கத்தால் (American Diabetes Association) பின்வருமாறு நீரிழிவு நோயானது வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. நீரிழிவு வகை (Type 1 Diabetes)

நீரிழிவு நோயாளிகளில் 5 -10 வீதமான தொகையினர் இந்த வகைக்குரியவர்கள். இது முன்பு இன்சுலின் சார்ந்த நீரிழிவு எனவும் அழைக்கப்பட்டது. (Insulin Dependent Diabetes Mellitus - IDDM) இந்த நோயானது சதையிச் சுரப்பியில் உள்ள இன்சுலினை உற்பத்தி செய்கின்ற கலங்கள் பாதிப்படைவதால் ஏற்படுகின்றது. இதனால் இங்கு இன்சுலினிற்கு முழுமையான பற்றாக்குறை ஏற்படுகின்றது.

இந்த நோயானது பெருமளவில் மரபணுக்கள் சார்ந்ததாக இருப்பினும், சில பிற காரணிகளும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றுள் வைரஸ், குழந்தைப் பராயத்தில் மிக ஆரம்பத்திலேயே பசுப்பால் கொடுத்தல், புகையூட்டப்பட்ட உணவு வகைகளை உட்கொள்ளல் என்பன அவற்றுள் சிலவாகும்.

இந்த நோயானது பெருமளவில் இளவயதினரையே தாக்குகின்றது. பெரும்பாலும் 30 வயதுக்கு கீழ்ப்பட்டோரே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். அதி உச்சமான இந்த நோயின் வெளிப்பாடு 11 -13 வயதினரிடையே காணப்படுகின்றது.

அண்மைக்காலத் தரவுகளின் அடிப்படையில் இலங்கையில் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 12வீதமானவர்கள் நகரப்பகுதியைச் சார்ந்தவர்களாகவும், 8வீதமானவர்கள் கிராமப் பகுதியைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளர்.

யாழ்.மாவட்டத்திலும் இந்த நோய் குறிப்பிட்ட தொகை மக்களைப் பாதித்துள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையின் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளிகளில் பெரும்பான்மையினர் நீரிழிவு நோயாளிகளாவர்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பெரும்பான்மையான நீரிழிவு நோயாளிகள் 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக இருக்கும் அதேவேளையில், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பெரும்பான்மையான நோயாளிகள் 45-64 வயதுக்கு இடைப்பட்டவர்களாக உள்ளனர். இதனால் இந்த நோயானது வளர்முக நாடுகளின் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் இந்த நோயின் கட்டுப்பாடு மிக அவசியமாகின்றது.

நீரிழிவு நோயானது கண்டுபிடிக்கப்படாதவிடத்து அல்லது சரியான, போதுமான அளவு சிகிச்சை அளிக்கப்படாதவிடத்து பல்வேறு வகையான நோய்ச் சிக்கல்களுக்கு உள்ளாகின்றனர். இது பல்வேறு விதமான மீள்திருப்ப முடியாத குறைபாடுகளுக்கோ அல்லது இறப்புக்கோ இட்டுச் செல்கின்றது. இந்த நோயானது

- இதயம் சம்பந்தமான நோய்
- பாரிசவாதம்
- சிறுநீரகப் பாதிப்பு
- கண் பாதிப்பு
- நரம்பு சம்பந்தமான நோய்.

போன்ற பல்வேறு பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கிறது. இதனால் நோயாளியின் வாழ்க்கைத் தரமும் வாழ்க்கைக் காலமும் குறைவடைகின்றது.

உலகளவில ஏறத்தாழ 1-2வீதமான கர்ப்பவதிகள் இந்த நோயின் தாக்கத்துக்கு உட்படுகின்றனர். (Gestional Diabetes) இது தாயையும் குழந்தையையும் பெருமளவில் பாதிக்கிறது.

எமது பிரதேசங்களில் இந்த நோய் பற்றியதான விழிப்புணர்வு போதுமானதாக இல்லை அத்துடன், இந்த நோயை எவ்வாறு கட்டுப்படுத்தலாம், எவ்வாறு நோய் மேலும் மோசமடையாமல் தடுக்கலாம் என்பது பற்றிய அறிவு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அத்துடன் ஆளணிப் பற்றாக்குறை, நிதிப்பற்றாக்குறை, நீண்டு செல்லும் தொடர் யுத்தம் போன்றவை எமது பிரதேசங்களில் இந்த நோயைக் கட்டுப்படுத்தும் தன்மையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் காரணங்களால் நோயாளி பல்வேறு வேண்டத்தகாத குறைபாடுகளுக்கும், மோசமான நோய் நிலைக்கும், நோயாளியின் வாழ்க்கைக் காலம் குறைவடைவதற்கும் காரணமாக அமைகின்றது எனலாம்.

நீரிழிவு நோய் ஒருவருக்கு 40-59 வயதுக்குள் கண்டுபிடிக்கப்படுமிடத்து அவருடைய வாழ்க்கைக் காலம் 5-10 வருடங்களால் குறைவடைகிறது.

எனவே, நீரிழிவு நோய் எவ்வாறு ஏற்படுகின்றது? எவ்வாறான அறிகுறிகள் ஏற்படுகின்றது? எவ்வாறு நாம் அவற்றைத் தடுக்கலாம்? எவ்வாறான பரிசோதனை முறைகள், சிகிச்சை முறைகள் அளிக்கப்படுகின்றன? என பின் தொடரும் அத்தியாயங்களில் காணலாம்.

**உ.சிவசங்கர்**
**4ஆம் வருட மருத்துவ பீட மாணவன்**

## வடக்கு - கிழக்கு மாகாண சபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் II (நீகோட் II)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

**"ஆ.அ.வ" கடன் இல:- 2168 - SRI (SF)**

**"ஆ.அ.வ" கொடை இல:- 00007 - SRI (SF)**

### யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல: 02

1. வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டததின் (NECORD -II) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக் கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவு களுக்கு இக் கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
௨. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப் பாளருக்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்..

### அட்டவணை

| இல | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | JF/NECORD - II / AG/01 | கரவெட்டியில் கமநலசேவை நிலையம் மீளமைத்தல் | M6 (கட்டடங்கள்) | 65,900/= |
| 0௨. | JF/NECORD - II / AG/02 | சண்டிலிப்பாயில் கமநலசேவை நிலையம் மீளமைத்தல் | M6 (கட்டடங்கள்) | 65,900/= |
| 03. | JF/NECORD - II / RD/01 | வேலணையில் அல்லைப்பிட்டி – மண்கும்பான் வீதி புனரமைத்தல் | M6 (பெருந் தெருக்கள்) | 72,500/= |
| 04. | JF/NECORD - II / RD/02 | நெடுந்தீவு பிரதேசத்தில் 3.8 கி.மீ நீளமான வீதி மீளமைத்தல் | M6 (பெருந் தெருக்கள்) | 65,200/= |
| 05. | JF/NECORD - II / RD/03 | ஊர்காவற்றுறை சென். செபஸ்தியான் கண்ணகை அம்மன் வீதி, புனரமைத்தல் | M7 (பெருந் தெருக்கள்) | 39,500/= |
| 06. | JF/NECORD - II / RD/04 | வேலணையில் சுருவில் – வேலணை மீன்பிடி வீதி புனரமைத்தல் | M6 (பெருந் தெருக்கள்) | 50,500/= |
| 07. | JF/NECORD - II / ED/02 | கச்சாய் அ.த.க.பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூடம் அடங்கலாக 110'x25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 (கட்டடங்கள்) | 70,500/= |
| 08. | JF/NECORD - II / ED/07 | சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் 95' x 56' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் – நிலை 1. | M6 (கட்டடங்கள்) | 62,200/= |
| 09. | JF/NECORD - II / LS/01 | யாழ்ப்பாணத்தில் மிருக வைத்திய அலுவலகம் அமைத்தல் | M7 (கட்டடங்கள்) | 44,700/= |
| 10. | JF/NECORD - II / ID/03 | யாழ்.மாவட்ட செயலகத்தில் வாகன நிறுத்துமிடம் மீளமைத்தல் | M9 (கட்டடங்கள்) | 6,500/= |
| 11. | JF/NECORD - II / HS/03 | சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி விடுதி மீளமைத்தல் | M5 (கட்டடங்கள்) | 126,600/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையீடல் திறந்துள்ளது.
I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ("இக்ராட்" டுடன் M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.
III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங் களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள் ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.
IV. "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப் பேறபவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது..
VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன், ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.
4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங் களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோர முடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதி க்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித் திட்டப்பணிப் பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலை பேசி:- 021 – ௨௨23625, தொலைநகல்: –021 – ௨௨25163, மின்னஞ்சல்:- necordjf@sltnet.lk)
6. ஒப்பந்த ஆவணங்கள் மார்கழி மாதம் 7 ந் திகதி முதல் மார்கழி மாதம் ௨ ந் திகதி வரை, முற்பகல் 9.30 மணியிலிருந்து, பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்தி லிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,000/– செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்வி கள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப் பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்ட கேள்விச் சபை, "NECORD",கச்சேரி, யாழ்ப்பாணம்" இற்கு மார்கழி மாதம் ௨8 ந் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும. உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பநதகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் மார்கழி மாதம் ௨0 ஆம் திகதி பிற்பகல் ௨.00 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

**க.கணேஸ்,தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,**
**அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.** (C/4898)



## Hatton National Bank
## ஹட்டன் நஷனல் வங்கி
யாழ்ப்பாணம்

### அடகுப் பொருட்களை மீட்டல்/விற்பனைக்கான அறிவித்தல்

**எமது கிளையில் அடகுசேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்துக்கு**

நீங்கள் பெற்றுள்ள அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும், நிபந்தனைக ளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருட் களை ஒரு வருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் அறியத்தருகின் றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டி யையும் கடனின் ஒரு பகுதியையும் செலுத்திக் கடனின் காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருட் களை மீட்க/காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருட்கள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம். ஏலத்திகதி பின்னர் அறிவிக்கப் படும்.

(C/4900) **– முகாமையாளர்**



## தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து)

### வெற்றிடமான பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

சங்கத்தின் நிரந்தர ஆளணி நியமனத்திற்கான கீழ்காணும் பதவிக்கான வெற்றிடம் எமது சங்கப் பணியாளர்களிடமிருந்தும் வெளி வாரியாகவும் கோரப்படுகின்றன. "பொது முகாமையாளர், தெல்லிப் பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை" என்ற முக வரிக்கு 2005.12.19ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடிய தாக அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் .......... குறித்த பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும். கல்விச் சான்றிதழ், நற்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிட தகைமையை பிறப்புச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவிடின் அந்த விளக்கம் குறித்து அத்தாட்சிப்படுத்தும் கடிதமும் அனுப்பப்படல் வேண்டும்.

வயது எல்லை 18-40க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண் டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட் டாது.

**1. கிளை முகாமையாளர் 208/16**

சம்பளத் திட்டம் 3250-4500 / 60x10-65x10

தகைமைகள்.

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 17ஆம் சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (சாதாரண தரம்) பத்திரம்/ க.பொ.த. (சாதராண தரம்) பத்திரத்தில் 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக கணிதம்/ தூய கணிதம்/ சிங்களம்/ தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதாக ஆறு பாடங்களினான சித்தி.

**2. விற்பனையாளர் 308/17**

சம்பளத் திட்டம் 3000 - 4150 / 55x10-60x10

தகைமைகள்.

அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தராதரம்

அல்லது

ஆ) எட்டாம் வகுப்பிலான சித்தியும் விற்பனைத் தொழிலில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

**3. வாகன சுத்திகரிப்பாளர் 314/16**

சம்பளத் திட்டம் 3250-4500 / 60x10-65x10

தகைமைகள்.

அ) கூட்டுறவுச் சங்க பணியாளர் ஊழியர் 17ஆவது சம்பளத் திட்ட பதவியொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) 5ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழ் நல்ல தேகாரோக்கியத் துடன் இருத்தலும்.

(C/4899)

தெல்லிப்பழை. பொது முகாமையாளர்
தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இராணுவத்தினருக்கு எதிராக புலிகள் மறைமுக யுத்தம்!

## குற்றஞ்சாட்டுகிறது அரசாங்கம்

கொழும்பு —

அரச படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் மறைமுக யுத்தத்தை நடத்தி வருவதாக அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இருபாலையில் நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்த அரசு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் -

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பெயரால் விடுதலைப் புலிகள் மறைமுக யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுக்களை நடத்துகின்ற போதும் அவர்களது பயங்கரவாதப் போக்குகள் மாற்றமடையவில்லை.

அரசாங்கத்தை ஆத்திரப்படுத்தி யுத்தம் ஒன்றைத் தொடங்குவது விடுதலைப் புலிகளின் இலக்காகத் தோன்றுகிறது.

எனினும், பொறுப்பான அரசாங்கம் என்ற வகையில் கூடுதலான எச்சரிக்கையுடன் நடந்து, யாழ். குடாநாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசின் நிலைப்பாட்டுடன் நாளை பிரட்ஸ்கர் வன்னிக்கு வருகிறார்!

கொழும்பு —

வட பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள அச்ச நிலை குறித்து அரசின் நிலைப்பாட்டை கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஊடாக, விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நோர்வே தூதுவர் பிரட்ஸ்கர், வடக்கில் தற்போது ஏற்பட்டுள்ள நிலை தொடர்பாக நேற்றுமுன்தினம் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் கலந்துரையாடினார்.

இதனையடுத்து நோர்வே தூதுவர் பிரட்ஸ்கர் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தத் தீர்மானித்துள்ளார். இந்த விஜயத்திற்கு முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நோர்வே தூதுவர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

போர் நிறுத்த மீறல்களை உடன் நிறுத்தி பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு விரைவில் வருமாறும், விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்தப்படுமென நோர்வே தூதரகத் தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன், கிழக்கில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் பிரட்ஸ்கர் விடுதலைப் புலிகளிடம் பிரஸ்தாபிக்கவுள்ளார்.

அதேவேளை, நாளை வன்னிக்கு விஜயம் செய்யவுள்ள நோர்வே தூதுவர் பிரட்ஸ்கர் - முல்லைத்தீவுக்குச் செல்லவுள்ளார். நாளை மறுதினம் கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (தே)

## மன்னார் - பள்ளிமுனையில்

# கடற்படை சோதனையின் போது சயனைட் அருந்தினார் பெண்

மன்னார் —

மன்னார் - பள்ளிமுனைப் பகுதியில் இரண்டு பெண்கள் உட்பட ஐந்து பேர் பயணம் செய்த படகொன்றை கடற்படையினர் சோதனையிட முற்பட்டபோது - பெண் ஒருவர் சயனைட் உட்கொண்டார். இதன்போது ஏற்பட்ட முறுகல் நிலையால் கடற்படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சயனைட் அருந்திய பெண்ணும் கடற்படைச் சிப்பாயும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த படகில் பயணித்த ஏனைய நான்கு பேரும் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தப் படகில் கைக்குண்டுகள் இரண்டும், பெண்கள் அணியும் ஆடைகளும், மூன்று இடுப்புப் பட்டிகளும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## முப்படைகளின்...

ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் பலாலியிலுள்ள படைத் தலைமையகத்தில் - குடாநாட்டுப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் மற்றும் 51, 52, 53, 55 ஆவது டிவிசன்களின் கட்டளை அதிகாரிகள் மற்றும் பிரிகேட் தளபதிகளுடன் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக ஆலோசனை நடத்தினர்.

இராணுவத் தளபதியாக நேற்றுக்காலை பதவியேற்றுக் கொண்ட லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா உடனடியாகவே குடாநாட்டுப் பாதுகாப்பு நிலை தொடர்பாக அதிகாரிகளுடன் கொழும்பில் ஆலோசனை நடத்தியதாகவும் தெரியவருகிறது.

பதவியேற்பு உத்தியோகபூர்வ நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்த போதுதான் இருபாலை தாக்குதல் குறித்து இவருக்குத் தெரியப்படுத்தப்பட்டதாகவும் - இது இவருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

## கருணா குழுவினர் நால்வர்...

இனிய பாரதி மற்றும் சுமன் ஆகிய கருணா குழு முக்கியஸ்தர்களையும் மேலும் தேவன், சுரேஸ் ஆகிய உறுப்பினர்களையும் சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச்சென்று புலிகளிடம் சரணடைந்தனர்.

அக்கரைப்பற்று பள்ளிவாசல் மீதான தாக்குதல்,தமிழ் - முஸ்லிம் இனக்கலவரத்துக்கு இனியபாரதி தலைமையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததால், விரக்தியடைந்த நிலையிலேயே தாம் இந்தத் தாக்குதலை நடத்தியதாகப் புலிகளிடம் சரணடைந்த இருவரும் தெரிவித்தனர்.

இனியபாரதி உட்பட நால்வரைச் சுட்டுக்கொன்ற பின்னர் - இவர்களின் சகபாடிகள் இருவரும் புலிகளின் காவலரண்களுக்குச் சென்று சரணடைந்து விபரத்தை எடுத்துக் கூறியதையடுத்து புலிகளின் அணி ஒன்று சம்பவ இடத்துக்குச் சென்றது.

அப்போது கொல்லப்பட்டவர்களின் சடலங்களை மீட்க ஆயுதக் குழுவினரின் மேலதிக அணி ஒன்று படையினரின் உதவியுடன் சம்பவ இடத்துக்கு வரவே, அங்கு சண்டை மூண்டது.

புலிகளின் தாக்குதலையடுத்து சடலங்களை மீட்கவந்தோர் தாம் வந்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சில ஆயுதங்களை கைவிட்டுத் தப்பிச் சென்றனர்.

இதன்போது பல்சர் மற்றும் பஷன் பிளஸ் ரக மோட்டார் சைக்கிள்கள் இரண்டு, ஆர்.பி.ஜி - 01, ஏ.கே. மகசின்கள் - 02, கிரனேட்டுக்கள் 04 என்பவற்றை புலிகள் கைப்பற்றியதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமுற்ற ஒருவர் மொனராகல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாம் பன்னலகம என்ற இடத்திலுள்ள விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து செயற்பட்டு வந்ததாகவும், அவர்களின் உதவியுடனேயே புலிகளின் பிரதேசத்துக்குள் ஊடுருவ முடிந்ததாகவும் புலிகளிடம் சரணடைந்த இருவரும் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரையும் விரைவில் ஊடகவியலாளர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

தாக்குதல் நடந்த பன்னலகம பகுதியில் இருந்து சுமார் 3 கிலோமீற்றர் தொலைவிலேயே கருணா குழு புதிதாக முகாம் அமைத்திருப்பதாக செய்திகள் வெளியானமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன், ஊடகவியலாளர்களான நடேசன், சிவராம் உள்ளிட்ட பல்வேறு கொலைகளுடன் இனிய பாரதி தொடர்புபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## படையினரின் அத்துமீறலை...

கல்லூரி பகுதியில் ஒன்றுகூடிய பொதுமக்களும் மாணவர்களும் மாலுசந்தி வழியாக நெல்லியடி வரை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டப் பேரணி மாலுசந்தியை அண்மித்து வந்தபோது பாடசாலை மாணவர் மீது படைச் சிப்பாய் ஒருவர் தாக்குதல் நடத்தினார். இதனையடுத்து அந்த இராணுவச் சிப்பாய் மீது போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கற்களாலும் ரயர்களை கொளுத்தியும் எறிந்தனர். இதனையடுத்து அப்பகுதியில் நின்ற ஏனைய படையினரும் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர்.

தொடர்ந்து நெல்லியடியை அடைந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் சென்றோரை கலைந்துசெல்லும்படி படையினர் அச்சுறுத்தியதுடன் வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

எனினும், மக்கள் தமது ஆர்ப்பாட்டப் பேரணியைக் கைவிடாமல் தொடர்ந்து நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து நெல்லியடியில் இருந்து பருத்தித்துறை வரையிலான கடைகள் அனைத்தும் மூடப்பட்டு வெறிச்சோடி காணப்பட்டன. பிரதான வீதி எங்கும் ரயர்கள் எரிக்கப்பட்டு, வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டு போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. (12)

## படையினரால் பல பொதுமக்கள்...

இதனால் அச்சமடைந்த பொதுமக்கள் அலறியடித்துக்கொண்டு ஓடினர். வீதிகள், கடைகள், மற்றும் அருகிலுள்ள வீடுகளுக்குள் இருந்த பொதுமக்களும் சிதறி ஓடினர்.

அதேவேளை, சம்பவ இடத்துக்கு வந்த படையினர் கண்ணில் அகப்பட்டவர்களை பால், வயது வேறுபாடின்றி பொல்லுகளாலும், துப்பாக்கிகளாலும் கண்டபடி தாக்கினர். சில பெண்கள் சப்பாத்துக் கால்களால் தாக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் கோப்பாய்ச் சந்தியிலும், நீர்வேலி, சிறுப்பிட்டி, நல்லூர், கல்வியங்காடு பகுதிகளிலும் பலர் படையினரால் தாக்கப்பட்டனர்.

வாகனங்களில் பயணம் செய்வோர் அதிகளவில் தாக்கப்பட்டனர். பலர் படையினருக்குப் பயந்து தாம் வந்த சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களை அப்படியே போட்டுவிட்டு ஓடித்தப்பினர்.

யாழ்-பருத்தித்துறை வீதியில் கோப்பாய்ச் சந்திக்கும், கல்வியங்காட்டுக்கும் இடைப்பட்ட வீதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டது. நேற்றுமாலைவரை இந்த வீதியூடாகச் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை.

அச்சம் காரணமாக பொதுமக்கள் வீடுகளுக்குள் முடங்கியதுடன், வாகனங்களின் நடமாட்டமும் குறைந்து காணப்பட்டது. குறைந்தளவான பஸ்களே இராச வீதியூடாக சேவையில் ஈடுபட்டன.

காயமுற்ற படையினரை ஏற்றி வந்த வாகனங்களுக்குப் பாதுகாப்பு வழங்கிய படையினர் அச்சுவேலி நகரப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து பொதுமக்களைக் கண்டபடி தாக்கியதால் அந்தப் பகுதியிலுள்ள கடைகள் யாவும் மூடப்பட்டு வெறிச்சோடிக் காணப்பட்டது.

நேற்றுமாலைவரை அங்கு இயல்புநிலை மீளத் திரும்பவில்லை.

அதேவேளை, இருபாலைச் சந்தியில் இருந்த சில கடைகள் சேதப்படுத்தப்பட்டதாகவும், நகைக்கடையொன்று சூறையாடப்பட்டதாகவும் தெரிகிறது.

அச்சத்தினால் வர்த்தக நிலையங்களை உரிமையாளர்கள் சிலர் மூடாமல் ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இருபாலைத் தாக்குதலையடுத்து படையினர் மேற்கொண்ட தாக்குதலில் பலர் காயமடைந்தனர். இவர்களில் -

நீர்வேலியைச் சேர்ந்த து.பத்மநாதன் (வயது 31), மானிப்பாயைச் சேர்ந்த எஸ்.சேனாதிராசா (வயது 42), சுப்பிரமணியம் மலர் (வயது 42), க.பத்மநாத் (வயது 44), எஸ்.கிருஸ்ணா (வயது 48) ஆகியோர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (90, 82)

## இருபாலை கிளைமோர்...

காயமடைந்தார் என்றும் தெரியவருகிறது.

லெப்.டி.வி.முத்துகலகே, கோப்ரல் சமரசிங்க, சுமித்குமார, அத்தநாயக்க, தயாவன்ச, விஜேதுங்க, திலகஶ்ரீ ஆகிய படையினரே இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மற்றொரு சிப்பாய் வாகனம் ஒன்றின் மூலம் பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து இருபாலை இராணுவ முகாம் மற்றும் ஏனைய படை முகாம்களில் இருந்து உதவிக்கு விரைந்த படையினர் சுமார் 20 நிமிடங்கள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் நடைபெற்ற போது - அந்த வீதி வழியாக வந்த சுவிஸ் நாட்டு தொண்டர் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதிகள் மூவர் மயிரிழையில் உயிர் தப்பியதாக தெரியவருகிறது.

சுவிஸ் அபிவிருத்தி மற்றும் கூட்டுத்தாபன ஏஜென்சி என்ற தொண்டர் நிறுவனத்தின் சார்பில் சுனாமி மீள் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள இரண்டு சுவிஸ் நாட்டவர்களும், இவர்களில் ஒருவரின் மனைவியுமே அதிஷ்டவசமாக உயிர் தப்பியவர்களாவர்.

இவர்கள் பயணம் செய்த வாகனம் சம்பவ இடத்தை அண்மித்த போதே - குண்டுவெடிப்பு நிகழ்ந்தது என்றும், இந்த வாகனத்திலேயே காயமுற்ற படையினர் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதாரணகே தெரிவித்தார்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட கிளைமோர் உயர்சக்தி பிளாஸ்ரிக் வெடிபொருளுடன் நூற்றுக்கணக்கான இரும்புக் குண்டுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டதெனவும் அவர் குறிப்பிட்டார்.

கோண்டாவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 7 படையினர் பலியாகி சுமார் 48 மணித்தியாலங்களுக்குள் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் எந்த சவால்களை....

இதனை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப்புலிகள் இதைச் செய்யவில்லை என்று நாம் ஒட்டுமொத்தமாக புறந்தள்ளி விடமுடியாது. ஏனெனில், இந்தவகையான தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடிய ஆற்றல் அங்கு அவர்களைத் தவிர வேறுயாரிடமும் இல்லை.

அனேகமாக ஒன்று அல்லது இரண்டு குழுக்களே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

அவர்களால் கிளைமோர் குண்டுகளை வெடிக்கவைப்பதும், ஒருசில தரப்பினர் மீது துப்பாக்கிச் சூடுநடத்துவதும் பாரிய யுத்தம் ஒன்றுக்கு மீண்டும் எம்மை இட்டுச் செல்லும் எனக் கூற முடியாது.

கௌரவமான இறுதிச் சமாதானத்தை அடைய நேர்மையாகவும், உறுதியாகவும் யாவரும் உழைக்க வேண்டும். விடுதலைப்புலிகளுடன் களமட்டத்திலாவது பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். விடுதலைப் புலிகளுடன் கூடிய விரைவில் நாம் தொடர்புகளை ஏற்படுத்தி தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளை எவ்வாறு சுமுகமாகத் தீர்த்து வைக்க முடியும் என்பது குறித்துக் கலந்துரையாடவேண்டும்.

விடுபட்ட தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்தி இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க அவர்களால் எவ்வாறு உதவ முடியும் என்பதை ஆராய முடியும். ஏனெனில், யாழ்ப்பாணம் இராணுவத்தின் முழுக்கட்டுப்பாட்டில் இருக்கிறது.

அதற்கு அடுத்த படியாக விடுதலைப்புலிகளே அங்கு பலம் வாய்ந்த சக்தியாக விளங்குவதுடன், அங்கு மக்களைக் கட்டுப்படுத்தும் திறன் அவர்களுக்கு இருக்கிறது.

எவ்விதசவால்களுக்கு மத்தியிலும் தாக்குதல்களிலிருந்து படையினரைப் பாதுகாக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

பாதுகாப்பு வலயத்தில் உள்ள வீடுகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான அரசாங்கத்தின் கொள்கையை நான் அங்கீகரிக்கின்றேன்.

இந்த வீடுகளில் பெரும் பாலானவற்றை புலிகள் பலவந்தமாக சுவீகரித்துக் கொண்டுள்ளனர். இதன் காரணமாக 14 ஆயிரம் வீடுகளில் 75 சதவீதமான உரிமையாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

சகல இராணுவத்தினரும் நாட்டின் இறைமை, பூகோள ஒருமைப்பாடு ஆகியவற்றுக்காக தம்மை அர்ப்பணிக்க தயாராக இருக்கவேண்டும். இராணுவத்தினர் துஷ்பிரயோகம் செய்வதோ, தவறாக வழிநடப்பதையோ அனுமதிக்கப்படமாட்டாது.

இராணுவத்திலுள்ள குறைபாடுகள் எனக்கு நன்றாகவே தெரியும். இராணுவத்திற்குத் தேவையான உபகரணங்கள்மற்றும் அத்தியாவசிய உதவிகள் செய்து கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267 ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.12.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.